DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198


MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1264 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday June 26, 2020

- உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 9,706,189 ஆக உயர்ந்தது....
- உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 490,311 ஆக அதிகரித்துள்ளது...
- இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை ...
- அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 125,381 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை 11ம் திகதி மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.



| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 125,381 | இத்தாலி: 34612 | கனடா: 8537 | இங்கிலாந்து: 43,514 | ஸ்பெயின்: 28,321 |
| ஜேர்மனி: 9,021 | பிரான்ஸ்: 29,802 | ஈரான்: 10,301 | சீனா: 4659 | இந்தியா: 15824 |
| இலங்கை: 11 | பெல்ஜியம்: 9732 | பிரேசில்: 56,321 | ரஸ்யா:- 8719 | |

# Carlene Jackson, the New Interim Director for Toronto District School Board

## ரோரென்ரோ கல்விச் சபையின் புதிய இடைக்கால பணிப்பாளராக பெண்மணி ஒருவர் நியமனம்



கனடாவில் அதிக பாடசாலைக் கொண்ட கல்விச் சபையாக விளங்கும் ரொரென்ரோ கல்விச் சபையின் புதிய இடைக்காலப் பணிப்பாளராக திருமதி கார்லின் ஜெக்ஸன் என்னும் கறுப்பினப் பெண்மணி நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே பல ஆண்டுகள் கல்விச் சபை இயக்குனராகப் பணியாற்றிய ஜோன் மெலோய் என்பவர் தனது பதவியை விட்டு விலகிச் செல்வதால் இந்த புதிய நியமனம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரோரென்ரோ கல்விச் சபைக்கு மக்களால் தேர்தெடுக்கபட்ட உறுப்பினர்கள் சேர்ந்து இந்த நியமனத்திற்கான சிபார்சினை வழங்கியமையும், மேற்படி கல்விச் சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற மூன்று தமிழ் பேசும் உறுப்பினர்கள் உள்ளனர் என்பதும் அவர்களில் இருவர் கணவன்-மனைவியான தம்பதி என்பதும் மூன்றாமவரும் ஒரு பெண்மணி என்பது பலர் அறிந்த விடயமாகும்.

எதிர்வரும் யூலை மாதம் 15ம் திகதி பதவியேற்கவுள்ள திருமதி கார்லின் ஜெக்ஸன், ரொரென்ரோ கல்விச் சபையின் இணை கல்விப் பணிப்பாளராக பல ஆண்டுகள் பணியாற்றி உள்ளார்.

அவரது நியமனம் பற்றிய அறிவிப்பு வெளியான பின்னர் திருமதி கார்லின் ஜெக்ஸன் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் "நான் எனது பதவியேற்பிக்குப் பின்னர் இந்த கல்விச் சபைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள், கல்விச் சபையில் கல்வி பயிலும் மாணவர்களது பெற்றோர் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்கி சேவையாற்றவுள்ளேன். எமது நிர்வாகத்திற்கு கீழே வரும் பாடசாலைகளின் தேவைகள் மற்றும் இந்த நெருக்கடியான கோவிற்-19 நோய்த் தொற்றுக்கு எதிராக எவ்வாறு பயணிப்பது போன்ற விடயங்களுக்கு நாம் முன்னுரிமை வழங்குவேன்' என்றார்.

திருமதி ஜெக்சன், கனடாவில் அரச சேவையில் சுமார் 20 வருடங்கள் கடமையாற்றியவர் ஆவார். இங்குள்ள மூன்று வகை சார்ந்த அரசுகளிலும் பல பதவிகளை வகித்த இவர், ஒன்றாரியோ நிதி அமைச்சு மற்றும் ஒன்றாரியோ நிதிச் செயலகம் ஆகியவற்றிலும் முக்கிய பதவிகளை வகித்தவர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line | Visit
(416) 489-2000 | GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

HAPPY CANADA DAY!

கனடிய தின நல் வாழ்த்துக்கள்!

Markham Ward 8 Councillor

Isa Lee



(905) 948-5108

ilee@markham.ca

@CouncillorIsaLee

@CouncillorIsaLee

@Isasewan



ஜூலை 2 ஆம் தேதி முதல் மருத்துவம்-அல்லாத முகக் கவசங்கள் அணிவது கட்டாயமாகும்

பேருந்து கட்டணம் செலுத்துவது மற்றும் பேருந்தின் முன் வாசலில் ஏறுவதுவும் கூட துவங்குகிறது

நம் அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க ஒன்றிணைந்து செயல்படுகிறோம்

Brampton Transit YOURS. FOR LIFE.

züm

bramptontransit.com

Carefirst Family Health Team

Accepting New Patients




புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam

OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.uthayannews.ca

## உதயன் கதிரோட்டம்

# காக்கும் பணியைச் செய்ய வேண்டிய காவல்துறை கொலைகளை அல்லவா செய்கின்றது

காவல்துறை என்றால் அங்கே மக்களைக் காக்கும் தெய்வங்கள் உள்ளன என்று தானே மக்கள் எப்போதும் நம்பியிருந்திருப்பார்கள். ஆனால் அங்கு இப்போது கடிநாய்களும் அதற்கு மேலாக ஓநாய்களும் உள்ளனவோ என எண்ணும் வகையில் சம்பவங்கள் பல நாடுகளில் இடம்பெறுகின்றன. அதிலும், தமிழ்நாட்டிலும், இலங்கையின் தமிழர் தாயகம் என்றும் இறுமாப்போடு நாம் உச்சரித்து வந்த எமது தமிழர் மண்ணிலும் தினமும் நிகழும் ஒன்றாக மாறிவிட்டன.

25வது வருடத்தை எட்டும் நிலையில் உள்ள எமது கனடா உதயன் பத்திரிகையின் கதிரோட்டம் என்னும் ஆசிரியருக்குரிய பக்கத்தில் இதுவரை சுமார் ஆயிரத்து இருநூற்றி ஐம்பதுக்கு மேலாக ஆசிரியத் தலையங்களை எழுத்தில் வடித்திருப்போம். அவற்றில் சுமார் நூறு தலையங்கள் என்றாலும் ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் காவல்துறையைப் பற்றி உண்மையான விமர்சனங்களை முன்வைத்துள்ளோம்.

ஆனால் காலப்போக்கில் எமது மக்கள் தாங்கள் துன்புறுத்தப்படுவதையோ அன்றி தாக்கப்படுவதையோ பெரிய விடயமாகக் கருதவில்லை. எமது சிறிய தவறுகளைக் கூட கண்டு பிடித்து தண்டனையாக எம்மைத் தாக்குவதோ அன்றி கொலை செய்வதோ தான் காவல்துறையின் கடமை என்று எண்ணியிருப்பார்கள். இந்த எண்ணமானது காவல்துறையில் உள்ள கயவர்களுக்கு பெரிதும் வாய்ப்பாக மாறிவிடுகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் மரக்கடை அதிபர் ஜெயராஜ் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரும் அரசு அறிவித்த நேரத்தைவிட கூடுதலாக அரைமணி நேரம் கடையை திறந்து வைத்ததிற்காக அவர்களைத் துன்புறுத்தி கொலை செய்துள்ள்மை உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஜெயராஜ் அவரது மகன் பென்னிக்ஸ் கொலைபோன்ற கொடுங்குற்றம் செய்தவர்கள் அல்ல. ஊரடங்கு நேரத்தில் கூடுதலாக ஒரு அரை மணி நேரம் கடையை திறந்து வைத்த குற்றத்திற்காக கொலை செய்யலாமா என்று முதலமைச்சர் வாய் திறந்திருக்க வேண்டும். ஆனால் எமக்கு பிந்திக் கிடைத்த தகவல்களின் படி அந்த பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் மூவர் இறந்தவரின் தொலைபேசி கடைக்குச் சென்று ஒருவருக்கு இலவசமாக தொலைபேசி ஒன்றை தரவேண்டும் என்று வற்புறுத்தினார்களாம். ஆனால் கொல்லப்பட்ட பென்னிக்ஸ் விலையைக் குறைத்து தரலாம் ஆனால் இலவசமாகத் தரமுடியாது என்று மறுத்தாராம். தொலைபேசி தரமறுத்த காரணத்திற்காக திட்டமிட்டு அவரின் கடை கடை சரியான நேரத்திற்கு வியாபாரம் நிறுத்தப்படாமல் இருந்ததைக் கண்டு அவரை அடித்து துன்புறுத்தியுள்ளார்கள். பின்னர் ஜெயராஜ் அவரது மகன் பென்னிக்ஸ் இருவருமே இறந்து போனார்கள்.

இதே போன்று இலங்கையின் தமிழர் நிலப்பகுதியில் வசித்து வந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மணல் ஏற்றச் சென்றதாக கூறப்ப்படும் உழவு இயந்திரத்தின் மீது அதிரடிப்படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டிலேயே இளைஞன் கொல்லப்பட்டுள்ளார் என்று சொல்லப்பட்டாலும், இதுவும் ஒரு பழிவாங்கும் கொலை என்றே கூறப்படுகின்றது.

இவ்வாறு பார்க்கும் போது சிறிய வர்த்தகம் ஒன்றைச் செய்துவந்த இளைஞர் ஒருவரும் அவரது தந்தையாரும் அநியாயமான முறையில் காவல் துறை என்னும் கொடியவர்களால் கொல்லப்பட்டுள்ளார்கள். அதேபோன்று மணல் எடுத்துச் செல்லும் ஏழை இளைஞன் ஒருவர் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். அரசியல்வாதிகளும் மக்கள் சொத்துக்களை கொள்ளை அடிப்பவர்களையும் பாதுகாக்கின்ற காவல்துறை சாதாரண நடுத்தர அல்லது வறுமையின் பிடியில் வாடும் குடும்பத்தின் இளம் செல்வங்களின் உயிர்களைக் குடிக்கும் கொடுமையை பாதிக்கப்பட்டவர்களும் அவர்களோடு சேர்ந்து போராட வேண்டியவர்களும் ஒன்று சேர்ந்து முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு சென்றடைய
நினைவஞ்சலி மற்றும் அந்தியேட்டி அழைப்பு விளம்பரங்கள் இலங்கையில் உள்ள பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...
நினைவஞ்சலி Posters மற்றும் அந்தியேட்டி அழைப்பு நூல் வடிவமைத்து அச்சிட்டு செய்துதரப்படும்...
+94 777-555026
6A, Perakumba Place, Wellawatte.

BASEMENT FOR RENT
Markham நகரில்
McCowan / 14th Ave.
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.
Separate entrance உள்ளது.
முழுமையான சமையல் பகுதி, மற்றும் washer, dryer அனைத்தும் உண்டு.
சிறிய ஒரு குடும்பம் விரும்பத்தக்கது.
ஒரு வாகனத் தரிப்பிடம் வழங்கலாம்.
வாடகை: $1,350 மட்டுமே.
Call: (416) 726-8403

முடி வெட்டுனர் தேவை (HAIR CUTTERS)
ஸ்காபுறோவில் அமைந்துள்ள பிரபல சலூன் ஒன்றுக்கு உடனடியாக ஆண், பெண் மடிவெட்டுனாகள் தேவைப்படுகின்றார்கள்.
அனுபவம் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Call: (647) 470-4615

வேலைக்கு ஆட்கள் தேவை
ஸ்காபுறோவில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலரும் அமைக்கலாம்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Call: (416) 299-6742

WAREHOUSE ORDER PICKER WANTED
(For a Food distribution company in Scarborough)
Job Description:
● Order picking and packing as well as stocking up of shelves.
● Contribute to daily inbound or outbound warehouse operations.
● Palletize and wrap skids, Organize warehouse space, Pick and load orders quickly and accurately and other duties as required.
Requirements:
● 2 positions, Preferred Experience - 2-3 yrs. in food wholesale/distribution warehouse. Students/New Immigrants Welcome.
● Capable of lifting up to 50lbs
● Able to speak English
● Full time/ Part time Monday - Friday
● Hourly Rate - Order Picker - $18 to $21, depending upon experience.
Please send your resumes by email at siva@srimi.com
or by fax at +1 647-351-7157 or
Call Ram at +1 647-831-9149 (Morning) or Siva at +1 416-666-8525 (Evening).

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
▶ Corporate Tax
▶ Personal Tax Planning
▶ Accounting
▶ Financial Statements
▶ Business Plan & Proposals
▶ For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# உலக நாடுகளிமிருந்து ஒத்துழைப்பு இல்லை என்று விரக்தியுடன் கூறுகிறார் ஐ.நா பொதுச்செயலர்

கொரோனாவுக்கு எதிரான போரில் உலக நாடுகளின் தலைவர்களிடையே ஒத்துழைப்பு இல்லையென ஐ.நா சபை பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரெஸ் விமர்சித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி ஒரு மக்களின் தடுப்பூசியாக இருக்க வேண்டும். ஆனால் நாடுகளிடையே வணிக ரீதியான தகராறில் பணக்காரர்களை உருவாக்கும் தடுப்பூசியாக இருக்க கூடாது. தற்போதைய நேரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு இல்லாததால் விரக்தியடைகிறேன். ஆனால் புதிய தலைமுறையினரால் எதிர்காலத்தில் விஷயங்களை மாற்ற முடியும் என்று நம்புகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏ.எ‌ஃ.ப்.பி நிறுவனத்துக்கு ஐ.நா சபை பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரெஸ் அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது தற்போது செய்ய வேண்டியது தனித்து செயல்படுவதன் மூலம் அவர்கள் நிலைமை கட்டுப்பாட்டை மீறி செல்லும் சூழ்நிலையை உருவாக்குகிறார்கள் மற்றும் உலக ஒருங்கிணைப்பு முக்கியமானது என்பதை நாடுகளுக்கு புரிய வைப்பதாகும்.

சீனாவில் இருந்து பரவ துவங்கிய கொரோனா தொற்று ஐரோப்பியா நாடுகளுக்கும் அடுத்து வட அமெரிக்க மற்றும் தற்போது தென் அமெரிக்கா ஆப்ரிக்கா மற்றும் இந்தியா முழுவதும் பரவியுள்ளது. தற்போது சிலர் இரண்டாவது அலை எப்போது வேண்டுமானாலும் வருமென பேசிக் கொண்டிருக்கின்றனர். இது கொரோனா தொற்று தொடர்பாக நாடுகளுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பு இல்லாமையே காட்டுகிறது.

நாடுகளுக்கு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து புரிதலை ஏற்படுத்தி திறன்களை ஒருங்கிணைப்பது அவசியம். கொரோனா தொற்றை எதிர்த்து போராடுவது மட்டுமின்றி சிகிச்சை பரிசோதனை முறைகள் தடுப்பூசி உள்ளிட்டவை அனைவருக்கும் கிடைக்க செய்வதன் மூலம் மட்டுமே கொரோனாவை வீழ்த்த முடியும்கொரோனா தொற்றால் ஏற்பட்டுள்ள வேலை இழப்புகள் வன்முறை அதிகரித்தல் மற்றும் மனித உரிமைகள் மீறப்படுதல் உள்ளிட்டவற்றிற்கு அரசியல் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஒருங்கிணைப்பதும் தொற்றுநோயின் தாக்கத்தை குறைக்க உதவும். என்றும் அவர் குறிப்பிட்டார்.



ஐ.நா சபை பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரெஸ்:

- கொரோனா தொற்று பரவ துவங்கியதில் இருந்து இரண்டாம் உலக போருக்கு பின் உலக நாடுகள் சந்திக்கும் மிகப்பெரிய சவால் என கூறிய குட்டரெஸ் சர்வதேச நாடுகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.
- மார்ச் 23ம் தேதி அனைத்து சண்டை சச்சரவுகளை விடுத்து கொரோனாவை எதிர்த்து போராட உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் சரியான பதில் கிடைக்கவில்லை.
- தற்போது உலகளவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 93 லட்சத்து 53 ஆயிரத்து 738 ஆக அதிகரித்துள்ளது. 4.79 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# இலங்கையில் கொரோனா பரவும் அபாயம் பற்றி ஜனாதிபதி கோட்டபய எச்சரிக்கை



கவனக்குறைவு போன்ற காரணங்களால் மூலம் மீண்டும் கொ-ரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதால் சுகாதார அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து இலங்கையர்களும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக‘ வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்று இடப்பட்டிருந்தது. குறித்த பதிவு பின்வருமாறு உலகின் அனைத்து நாடுகளும் நோய் தொற்றினால் அவதியுறும் நிலையில் எமது நாடு நம் அனைவரினதும் ஒன்றிணைந்த முயற்சியினால் குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளோம்.

இருந்தபோதிலும் கொரோனா நோய்த் தொற்றானது முற்றாக இல்லா தொழிக்கப்படவேண்டும். கவனயீனமான செயற்பாடுகள் நோய்த்தொற்றை மீண்டும் பரப்பக் கூடும். எனவே சுகாதார துறை மற்றும் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை முற்றாக பின்பற்றுமாறு அனைத்து இலங்கையர்களையும் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தை திறப்பதற்கு சுகாதார துறைஅனுமதி வழங்கவில்லை




கவனக்குறைவு போன்ற காரணங்களால் மூலம் மீண்டும் கொ-ரோனா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதால் சுகாதார அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து இலங்கையர்களும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அதிகாரப்பூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்று இடப்பட்டிருந்தது. குறித்த பதிவு பின்வருமாறு உலகின் அனைத்து நாடுகளும் நோய் தொற்றினால் அவதியுறும் நிலையில் எமது நாடு நம் அனைவரினதும் ஒன்றிணைந்த முயற்சியினால் குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளோம்.

# பொது தேர் மக்கள் சிந்தித்து வாக்களிக்களித்து சஜித்தை பிரதமராக்க வேண்டும் என்கிறார் இராதாகிருஷ்ணன்

மலையகத்தில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமெனில் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்து சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவதற்கு மலையக மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் அமைச்சர் ராதாகிரு‘ணன் கோரிக்கை விடுத்தார்.

அட்டன் வெளிஓயா பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது தமிழ் முஸ்லிம் வாக்குகள் தேவையில்லை. அதற்காக அவர்களிடம் கையேந்தமாட்டோம் என விமல்வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். அதாவது தமிழ் மக்களே தங்களிடம் கையேந்தவேண்டும் என்பதே அவரின் நினைப்பாக உள்ளது.

வீடமைப்பு அமைச்சு பதவியை வகித்த விமல்வீரவன்ஸ மலையகத்தில் வீடுகளை கட்டவில்லை. இனியும் அவர் அமைச்சரானால் எமது பகுதிகளில் வீடுகளை நிர்மாணிக்கமாட்டார்.

இந்நிலைமை மாறவேண்டுமானால் தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்து சஜித்தை பிரதமராக்குவதற்கு எமது மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலையக கட்சிகளை விமர்சிப்பதற்கு நான் இங்கு வரவில்லை. எமக்கு தேவையான விடயங்களை எடுத்துரைக்கவே வந்துள்ளேன். வாக்கு என்பது உங்கள்உரிமை.அதனைஎங்களுக்குதாருங்கள்எனபலவந்தமாகக்கேட்கமுடியாது. ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்களின் குடும்பத்தில் நால்வர் இருந்தால் இரண்டு வாக்குகளை அவர்களுக்கும் இரண்டை எங்களுக்கும் வழங்கலாம். இது கோரிக்கை மாத்திரமே.

தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த பொதுத்தேர்தலில் 6 ஆசனங்களை வென்றெடுத்தது. இம்முறை இரத்தினபுரி கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் ஒவ்வொரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை எதிர்பார்க்கின்றோம். நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முக்கியத்தும் மிக்கதாகும். - என்றார்.

# ஜனாதிபதி நாட்டில் சிங்கள பௌத்த தேசிய வாதத்தை பரப்ப முற்படுன்றார்

## – வேட்பாளர். கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம்

யாழ்ப்பாணத்திலிருந்து வாதவூர் டிஷாந்த்

ஜனாதிபதி இந்த நாட்டில் சிங்கள பௌத்த தேசிய வாதத்தை பரப்ப முற்படுவது நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஜனநாயகத்தைப் பேணுவதுடன் நிருவாகத்துறைகள் இராணுவ மயமாக்கலை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு நல்லையா வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இன்று (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் அரசு தமது பலத்தை கூடுதலாக பிரயோகிக்கும் என்ற நிலைமை தற்போது உள்ளது. சர்வதேச கண்காணிப்புக்குழுக்களின் மேற்பார்வையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் அப்போதுதான் ஜனநாயக தேர்தலாக இருக்கும். இந்த விடயத்தில் அரசு இன்னும் சரியான கரிசனை காட்டவில்லை.

அரசு இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பேண வேண்டும். இராணுவ மயப்படுத்தப்படுகின்ற இந்த நிலமையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஜனாதிபதி முற்று முழுதாக சிங்கள பௌத்த தேசியவாதத்தை இந்த நாட்டிலே பரப்புவது இந்த நாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என்ற விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் உரிமை வழங்ககூடிய விதத்தில் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சியும் செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை போர் தொடர்பான விடயத்துக்கும் இன்னும் முடிவு கிடைக்கவில்லை. பொறுப்புக் கூறுதல் விடயத்தில் ஐக்கிய நாடுகளை சபையில் வைக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் அரசு சரியான பதிலை வழங்க வில்லை. அதிலிருந்து பின்வாங்குவதாக கூறியுள்ளார்கள்.

சர்வதேச மட்டத்தில் இவ்வாறான ஒரு விடயத்தில் ஒருவரும் பின்வாங்க முடியாது. அதனுடைய செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். பொறுப்புக் கூறலுக்கும் இணக்கம் தெரிவிக்காமல் விட்டால் அது மாற்று வகையில் நிச்சயமாக கையாளப்படும்.

3 இலங்கையை ஒரு நாடாக வைத்துக்கொண்டு மக்கள் எல்லோரும் சமமானவர்கள் என்ற அடிப்படையில் இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். தற்போதுள்ள செயற்றிட்டங்களை மறு பரிசீலனை செய்து கொண்டு எல்லோருக்கும் சம உரிமை வழங்க கூடிய விதத்தில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்ற எங்களது கோரிக்கைக்கு அரசு கவனம் செலுத்த வேண்டும்.



கடந்த அரசாங்க காலத்தில் உருவாக்கி முற்றுப்பெறாதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக்குகின்ற வகையில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும். இவ்வாறு வருகின்ற போது இந்த விடயங்களில் எங்களுடைய பூரண ஒத்துழைப்பை நாங்கள் வழங்குவோம்.

பிராந்தியங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்ட அந்த உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படுகின்ற செயற்பாட்டு அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கக்கூடிய விதத்தில் இருக்குமானால் இந்த நாட்டில் நல்லிணக்கம் வரும் நல்லிணக்கம் ஏற்பட்டால் மாத்திரமே இந்த நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் இளம் சமுதாயம் ஆறுதலாக இந்த நாட்டில் வாழக்கூடிய நிலை ஏற்படும் இல்லையெனில் இந்த நாடு பலவித துன்பங்களை எதிர்நோக்க வேண்டி இருக்கும். ஏன்பதைக் கருத்தில் கொண்டு அரசு இந்த நாட்டை இலங்கையாக ஆளுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார்

MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000

Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |



Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004

Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# கொரோனா முடக்கத்தால் இந்தியாவில் 25 கோடி குழந்தைகளின் கல்வி பாதித்துள்ளதாக யுனிசெஃப் கூறியுள்ளது

கொரோனா வைரஸ் பொதுமுடக்கத்தால் இந்தியாவில் ஆரம்பக் கல்வி மற்றும் மேல்நிலைப் பள்ளியியில் பயிலும் 24 கோடியே 70 லட்சம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இதில் அங்கன்வாடி மையங்களுக்குச் செல்லும் 2.80 கோடி குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யுனிசெ.்.ப் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தெற்காசியாவில் மட்டும் கொரோனா வைராஸ ால் கொண்டுவரப்பட்ட பொதுமுடக்கத்தால் குறைந்தபட்சம் 60 கோடி குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கடந்த மார்ச் மாதத்திலிருந்து இந்தியாவில் பள்ளிகள், கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதால், பள்ளி, கல்லூரிகள் எப்போது திறக்கப்படும் என்ற உறுதியற்ற சூழல் நிலவுகிறது. பொதுத் தேர்வுகளையும் பல்வேறு மாநிலங்கள் ரத்து செய்துள்ளன. 12, 10-ம் வகுப்புத் தேர்வுகளையும் பல்வேறு மாநிலங்கள் ரத்து செய்தபோதிலும், இன்னும் சில மாநிலங்கள் முடிவு எடுக்க முடியாமல் திணறி வருகின்றன. இந்தச் சூழலில் கொரோனா வைரஸ் பொதுமுடக்கத்தால் இந்தியாவில் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது குறித்து யுனிசெ.்.ப் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: ““இந்தியாவில் கொரோ-னா வைரஸ் பரவல் தொடங்கியபின் கொண்டுவரப்பட்ட பொதுமுடக்கத்தால் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் ஏற்படுத்திய தாக்கத்தால் ஆரம்பக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வியில் பயிலும் 24 கோடியே 70 லட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 2 கோடியே 80 லட்சம் குழந்தைகள் பள்ளிக் கல்வியைத் தொடங்கும் முன் அங்கன்வாடி மையத்தில் பயில்பவர்கள். கொரோனா வைரஸ் பாதிப்புக்கு முன்பே, 60 லட்சம் சிறுவர், சிறுமியர் ஏற்கெனவே பள்ளியிருந்து விலகிவிட்டனர். இருப்பினும் மாணவர்களின் கல்வி பாதிப்படையாமல் இருப்பதற்காக மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு வழிகளைக் கையாண்டு கல்வி போதித்து வருகின்றன. குறிப்பாக மின்னணு தளங்கள் வாயிலாக அதாவது மொபைல் செயலிகள், தொலைக்காட்சி சேனல்கள், “திக்சா தளம்“, “ஸ்வயம் பிரபா“ சேனல், இ-பாடசாலை“ போன்றவற்றின் மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. சமீபத்தில் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் (என்சிஇஆர்டி) ஒன்றாம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு மாற்றுக்கல்வித் திட்டத்தையும் தயாரித்துள்ளது. அதாவது கொரோனா வைரஸ் காலத்தில் பள்ளிக்கு வரமுடியாத சூழலில், அவர்களுக்கு வீட்டிலிருந்தே பயிலும் திட்டத்தை வகுத்துள்ளது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்தியாவில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் கால்பங்கு அதாவது 24 சதவீதம் மாணவர்களுக்கு மட்டும்தான் வீடுகளில் இணையதளம் மூலம் கல்வி பயிலும் வசதி இருக்கிறது. அதிலும் நகர்ப்புறங்களில் மட்டும் அதிகம். பாலின அடிப்படையிலும் வேறுபாடு இருக்கிறது.

ஆனால், பெரும்பாலான மாணவர்களுக்குத் தொலைநிலைக் கல்வி வாயிலாக கல்வி பயிலும் வசதி இல்லை. அதாவது இண்டர்நெட் மூலம் கல்வி பயிலும் வசதி இல்லை. கடந்த மார்ச் 20-ம் தேதி முதல் ஏப்ரல் 10-ம் தேி வரை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவுக்கு 4 லட்சத்து 60 ஆயிரம் புகார்கள் வந்துள்ளன. இது வழக்கமாக வரும் புகார்களின் எண்ணிக்கையைவிட 50 சதவீதம் அதிகமாகும். இதில் 10 ஆயிரம் புகார்கள், அழைப்புகள் குழந்தைகளுக்கு ஆதரவு கேட்டு வந்தன. 30 சதவீதம் அழைப்புகள், புகார்கள் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, பாலியல் துன்புறுத்தல், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் ஆகியவை பற்றி வந்துள்ளன. இந்த கொரோனா வைரஸால் மற்றொரு முக்கியமான பாதிப்பு குழந்தைகளை எதிர்நோக்கியுள்ளது. சத்தான சரிவ-ிகித உணவு, எளிதாகக் கிடைப்பதில் தடை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட 2 கோடி குழந்தைகள் உடலுறுப்பு வளர்ச்சிக் குறைவால் பாதிக்கப்படுகிறார்கள், 4 கோடி குழந்தைகளுக்கும் அதிகமானோர், சத்தான உணவு இல்லாமல் வளர்ச்சியில் பின்தங்குகிறார்கள். 15 முதல் 49 வய-துடைய பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் நோய் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்““. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இரண்டாவது எம்எல்ஏ பலியாகியுள்ளார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு 2-வது எம்எல்ஏ பலியாகியுள்ளார். மேற்கு வங்க மாநிலத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தமோனா' கோ' இன்று சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார். அவருக்கு வயது 60. இவருக்கு ஏற்கெனவே இருதய நோயும், சிறுநீரக பாதிப்பும் இருந்ததால் கொரோனாவும் அதனுடன் சேர கோ மார்பிடிட்டிஸ் தாக்கத்தில் சிகிச்சைப் பலனளிக்காமல் போனதாக மருத்துவமனை அறிக்கை கூறியுள்ளது.



தமிழகத்தில் திமுக சட்டப்பேரவை உறுப்பினர் ஜெ.அன்பழகன் நாட்டிலேயே முதல் மக்கள் பிரதிநி-தியாக, கொரோனா வைரஸால் பலியானார். இப்போது 2-வது உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த தமோனாஷ் கோ', 3 முறை எம்எல்ஏவாகத் தேர்வு செய்யப்பட்டார். கடந்த 1998-ம் ஆண்டிலிருந்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் பொருளாளராக கோஷ் இருந்து வந்தார். தற்போது தெற்கு 24 பர்கானா மாவட்டத்தின் பல்தா சட்டப்பேரவைத் தொகுதி எம்எல்ஏவாக தமோனாஷ் கோஷ் இருந்தார். இந்நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன் உடல்நிலை சரியில்லாமல் தனியார் மருத்துவமனையில் தமோ-னாஷ் கோஷ் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு ஏற்கெனவே சிறுநீரகப் பிரச்சினையும், இதய நோயும் இருந்துவந்தது. மருத்துவர்கள் அவருக்குக் கொரோனா பரிசோதனை செய்ததில் அவருக்கு தொற்று உறுதியானது. இதையடுத்து, அவருக்குத் தீவிரமான சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் இன்று காலை தமோ-னாஷ் கோஷ் மருத்துவமனையில் உயிரிழந்தார் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமோனாஷ் கோஷின் மனைவியும், மகளும் கொரோ-னாவில் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்கள் குணமடைந்துவிட்டனர். கடந்த வாரம் முதல்வர் மம்தா பானர்ஜி எம்எல்ஏக்கள் கூட்டத்தைக் கூட்டியபோது தமோனாஷ் கோஷ் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்து வந்தது எனக் கூட்டத்தில் பிற எம்எல்ஏக்கள் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமோனாஷ் கோஷ் மறைவுக்கு முதல்வர் மம்தா பானர்ஜி ட்விட்டரில் இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் பதிவிட்ட கருத்தில், “மிகவும் வருத்தமாக இருக்கிறது. கட்சியின் பொருளாளரும் பல்தா தொகுதியில் 3 முறை எம்எல்ஏவுமான தமோனாஷ் கோஷ் மறைவு வேதனையளிக்கிறது. 1998-ம் ஆண்டிலிருந்து எங்களுடன் இருந்தவர் பிரிந்துவிட்டார்.

35 ஆண்டுகளாக மக்களுக்கும், கட்சிக்கும் ஏராளமான பணிகளை கோஷ் செய்துள்ளார். அவரின் சமூகப்பணிகள் மூலம் ஏராளமான உதவ-ிகள் செய்துள்ளார். அவர் விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவது கடினம். எங்கள் அனைவரின் சார்பில் அவரை இழந்துவாடும் மனைவி ஜார்னா, இரு மகள்கள், நண்பர்கள், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்” எனத் தெரிவித்துள்ளார். எம்எல்ஏ தமோ-னாஷ் கோஷ் மறைவுக்கு ஆளுநர் ஜெகதீப் தனகரும் இரங்கல் தெரிவித்துள்ளார். ட்விட்டரில் அவர் பதிவிட்ட கருத்தில், “பல்தா தொகுதியில் 3 முறை எம்எல்ஏவாக இருந்த தமோனாஷ் கோஷ் மறைவு வருத்தமளிக்கிறது. அனுபவமான தலைவராக வலம் வந்தவர். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன். அவரை இழந்து வாடும் மனைவி, குழந்தைகள், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்கள்” எனத் தெரிவித்துள்ளார்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# 2011 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றதா?

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றிருக்கும் என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது. இதற்கான 24 காரணங்களை பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவிடம் முன்வைத்துள்ளேன். எனவே எனது அறிவிப்பை அரசியல் மயப்படுத்தாமல் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவ-ரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்று முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக்கிண்ண இறுதிப்போட்டி தொடர்பில் அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்ட கருத்தானது இலங்கை அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் பொலிஸ் விசேட விசாரணைப்பிரிவினர் இன்று (24.06.2020) வாக்குமூலம் பதிவுசெய்தனர். நாவலப்பிட்டியவில் உள்ள அவரின் அலுவலகத்தில் வைத்தே சுமார் இரண்டு மணிநேரம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் கூறியதாவது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணபோட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தை கண்காணிப்பதற்காக நானும் சென்றிருந்தேன். எமது அணி தோல்வி அடைந்தமை தொடர்பில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அதன்பின்னர் பல தரப்பினரும் குறித்த போட்டி தொடர்பில் எனக்கு முறைப்பாடுகளை முன்வைத்தனர். இது தொடர்பில் நான் கருத்து வெளியிட்டிருந்தாலும் இம்முறையே பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது. நான் எந்தவொரு வீரரினதும் பெயரை குறிப்பிடவில்லை.

ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றிருக்கலாம் என்பதற்கான கருத்துகளையும் ஆவணங்களையும் நான் இன்று பொலிஸாரிடம் கையளித்தேன். 24 காரணங்கள் அடங்கிய 6 பக்க அறிக்கையை முன்வைத்துள்ளேன். விசாரணைகள் இடம்பெறுவதால் அவை எவ்வாறான விடயங்கள் என கூறமுடியாது.

நான் அரசியல் நோக்கிலோ அல்லது பிரச்சாரம் தேடுவதற்காகவோ இவ்வாறு கருத்து வெளியிடவில்லை. எனவே விசாரணைகள் முடிவடையும்வரை விமர்சனங்களை நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். பேசுவதை நிறுத்துவோம். விசாரணை அறிக்கை வரும்வரை காத்திருப்போம் – என்றார்.

# அம்பாறை மாவட்டத்தில் கருணாவிற்கு 'சவால்' விடுக்கும் கூட்டமைப்பு வேட்பாளர் கனேஸ்.



தென்தமிழீழம் என அழைக்கப்படும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் ஏகோபித்த உரிமைக்குரலாய் ஒலிப்பேன். இளைஞர்களின் உத்வேகமும் முதியோரின் ஆலோசனைகளும் எனக்கு பக்கபலமாக உள்ளன.

இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளரான பொறியிலாளர் கலாநிதி எஸ்.கனேஸ் தனது தேர்தல் பணிமனையைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

21ஆயிரத்து 820 தமிழ்வாக்குகளைக்கொண்ட கல்முனையில் இருந்துகொண்டு முழு மாவட்டத்தையும் அரவணைத்து ஒரே குடையின்கீழ் புத்திஜீவிகளினது வழிகாட்டலில் இளைஞர்களுடன் அரசியல் பயணத்தை முன்னெடுக்கத் தயாராகவுள்ளேன் என்றும் குறிப்பிட்ட அவர் மேலும் கூறியதாவது

கல்முனை மணற்சேனையிலுள்ள அவரது இல்லத்தில் இத்தேர்தல் பணிமனை இன்று(24) புதன்கிழமை த.தே.கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் த.தே.கூட்டமைப்பு ஒரேயொரு பெண் வேட்பாளரும் காரைதீவு பிரதேசசபை உறுப்பினருமான திருமதி சின்னையா ஜெயராணி உள்ளிட்ட பலரும் திறப்புவிழாவில் கலந்துகொண்டனர். அங்கு வேட்பாளர் கனேஸ் உரையாற்றுகையில்:

வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் மிகவும் வித்தியாசமான தேவைகளுடன் பூகோளரீதியில மாறுபட்டு மூவினங்களும் இணைந்து வாழுவது அம்பாறை மாவட்டமாகும். இங்கு 3ஆம் நிலையிலுள்ள தமிழ்மக்களுக்கான ஒரேயொரு பிரதிநிதித்துவத்தை தோற்கடிக்க வெளிமாவட்டத்திலிருந்து கருணா போன்று பலர் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர்.

அவர் பிறந்த மட்டக்களப்பை விட்டு அம்பாறை வந்துள்ளார். அங்கு அபிவிருத்தி செய்யவிட்டாராம். உண்மையில் இலங்கையில் வறுமையில் முதலிடம் பெற்ற மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டமாகும்.முதலில் அவர் அங்கு கவனிக்கட்டும்.

முதலில் அம்பாறை மாவட்ட தமிழ்மக்களுக்கான வலிமையான அரசியல்பலத்தை உருவாக்கவேண்டும். அதனூடாக கல்வி பொருளாதார சமூக அபிவிருத்தியை முன்னெடுக்கவேண்டும். அதற்கான பாரிய திட்டங்களை வகுத்துள்ளேன். செயற்படுத்தக்கூடிய விஞ்ஞாபனத்தை விரைவில் வெளியிடுவேன்.

1982க்குப்பிறகு அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் பலவழிகளிலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை அழிவுப்பாதையிலிருந்து மீட்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன். அதற்காக துறைசார்ந்த புத்திஜீவிகளை இணைத்து அவர்களின் வழிகாட்டலுடன் இளைஞர்களின் அரவணைப்போடு பயணிக்கவுள்ளேன் என்றார்.

# டென்னிஸ் வீரர் நோவாக் யாக்கோவிச்சுக்கு கொரோனா

உலகளவில் ஆடவர் டென்னிஸ் தரப்பட்டியலின் முதலிடத்திலிருக்கும் சோவாக் யாக்கோவிச் தனக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

செர்பியாவைச் சேர்ந்த யாக்கோவிச், குரேஷியா நாட்டிலுள்ள ஜடாரில் அர்டியா டென்னிஸ் போட்டியினை ஏற்பாடு செய்திருந்தார்.

வைரஸ் தொற்று பலவீனமடைந்த தாகக் கருதப்பட்ட நிலையில், அந்தப் போட்டியை நல்லெண்ணத்தில் அடிப்படையில், கொடையுணர்ச்சியுடன் தான் ஏற்பாடு செய்திருந்ததாகவும், ஆனால் இதனால் பல விளையாட்டு வீரர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது குறித்து மிகவும் வருந்துவதாகவும் யாக்கோவிச் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



குரேஷியாவிலிருந்து செர்பியத் தலைநகர் பெல்கிரேட் திரும்பியவுடன் தானும் குடும்பத்தாரும் பரிசோதனையை மேற்கொண்டதில், தனக்கும் மனைவிக்கும் தொற்று இருப்பது தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் பிள்ளைகள் பாதிக்கப்படவில்லை எனப் பரிசோதனையில் தெரியவந்துள்ளதாகவும் அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆனால், அவர் பொறுப்புணர்ச்சியின்றி, உலகமே இந்த நோயின் பிடியிலுள்ள நிலையில், அவர் அந்தப் போட்டியை நடத்தியது முட்டாள்தனமானது மட்டுமின்றி மோசமான செயல் என ட்விட்டரில் பலர் அவரை வறுத்தெடுத்துள்ளனர்.

தொற்று உறுதியானதை அடுத்து, தான் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலில் இருக்கப் போவதாக யாக்கோவிச் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இதே போட்டியில் பங்குபற்றிய வேறு சில விளையாட்டு வீரர்களுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

# நடிகர் நெப்போலியன் நடித்த முதல் ஆங்கிலப்படம் கனடாவில் வெளியாகிறது

டெல் கணேசன் தயாரிப்பில், நடிகர் நெப்போலியனின் நடித்த முதல் ஆங்கிலப் படம் "டெவில்ஸ் நைட்" இன்று டிஜிட்டலில் அமெரிக்கா மற்றும் கனடாவில் அமேசான், ஆப்பிள், ஃபன்டாங்கோ, நவ், வுடு உள்ளிட்ட இணையதளங்கள் மற்றும் டிவிடியில் வெளியாகிறது. விரைவில் உலகெங்கும் வெளியாக உள்ளது.

ஆரோன் ஹெர்மன் ருஸ்மேன் எழுதியிருக்கும் பரபப்பான திரைக்கதையை ஸாம் லோகன் காலெகி விறுவிறுப்புக் குறையாமல் இயக்கியிருக்கிறார். ஜெஸ ஜென்ஸன் மற்றும் நதன் கேன் மாதெர்ஸ் ஆகியோரின் இயல்பான நடிப்பில் உருவாகியிருக்கும் இந்தத் திரைபடத்தில் 130 படங்களுக்கும் மேல் நடித்திருக்கும் அனுபவசாலி நடிகர், நெப்போலியன் நடித்திருப்பது கூடுதல் எதிர்பார்ப்பைக் கிளப்பியிருந்தது. இப்படம் மூலம் ஹாலிவுட்டில் தடம் பதிக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்தப் படத்தின் திக் திக் நகர்வுகளுக்கு பிளாட்டினம் சிறப்பைப் பெற்ற கலைஞர் ஸ்வீஃப்டி மெக்வே அமைத்திருக்கும் இசை உறுதுணையாக இருக்கிறது. கைபா ஃபிலிம் நிறுவனத்தின் நிறுவனரும், தலைவரும், முதன்மைச் செயல் அலுவலருமான டெல் கணேசன் மற்றும் ஜி.பி.திமோதியோஸ் ஆகியோர் தயாரிப்பில் உருவாகியிருக்கிறது இந்தப் படம்.

சாகஸங்கள் நிறைந்த கிரைம் த்ரில்லர் பாணிப் படம் இது. டெட்ராய்ட்டை அடுத்திருக்கும் சிறிய நகரம் ஒன்றில் தொடர்ந்து கொலைகள் நடப்பதையும் அதை இரு காவல் துறை அதிகாரிகள் துப்பறிவதும்தான் கதை. கதையோட்டத்தில், அமானுஷ்யமான நைன் ரோக் நுழைவதிலிருந்து பார்ப்பவர்கள் இருக்கையின் நுனிக்கே வந்துவிடுவார்கள். மனிதனும் மனிதன் அல்லாத இருள் சூழ் உலகவாசிகளும் விசித்திரமான கோர சம்பவங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. இதில் வரும் பெண் பாத்திரம் ராணுவப் பின்புலத்தோடு மிடுக்காகத் தோற்றமளிக்கிறார் நடிப்பும் அச்சு அசல் ராணுவ அதிகாரியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. படத்தின் முடிவு சற்றும் எதிர்பாராதது - ஆனால் ஆளை அசத்தும் முடிவு!

"ஒளிப்பதிவு, தயாரிப்பு, ஒலியமைப்பு, எடிட்டிங் போன்ற ஒவ்வொரு துறையில் பணியாற்றியிருப்பவர்களும் தங்களின் முழுத் திறமையையும் வெளிப்படுத்தியிருப்பதைப் படம் பார்ப்பவர்கள் 100மூ ஒப்புக்கொள்வார்கள்" என கைபா ஃபிலிம்ஸ் தலைவர் டெல் கணேசன் சொல்கிறார். டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் படங்களை மக்களிடம் கொண்டுசேர்ப்பதில் தாங்கள் வழக்கம்போல வல்லுநர்கள் என்பதை ஊஜநுனுஐபுஆ மீண்டும் நிரூபித்திருக்கிறது. மாறி வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தன்வயப்படுத்தி, கோடிக்கணக்கான மக்களுக்குத் தரமான பொழுதுபோக்கு வழங்கும் CINEDIGM மக்கள் மனதில் நிச்சயம் இடம்பிடிக்கும்.

கைபா ஃபிலிம்ஸ் சிறப்பான ஒரிஜினல் படங்களையும், தரமான இசைக் காணொளிகளையும் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

# முகக்கவசம் அணியுங்கள் இல்லையேல் 2 ஆயிரம் ரியல்ஸ் அபராதம் என்று பிரேசில் அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவு

உலக அளவில் கொரோனா வைரசால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகள் பட்டியிலில் பிரேசில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அந்நாட்டில் இதுவரை 11 லட்சம் பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்கு வைரஸ் தாக்குதலால் இதுவரை 52 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிரேசிலில் வீடுகளை விட்டு வெளியே செல்லும் போது மக்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதிபர் போல்சோனரோ பொதுநிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போது முகக்கவசம் அணியாமல் விதிமுறைகளை மீறி செயல்பட்டு வந்தார்.

அதிபர் முகக்கவசம் அணியாமல் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பது அவரது ஆதரவாளர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும். அதிபரை பின்பற்றி பலரும் கொரோனா அச்சுறுத்தலை கருத்தில் கொள்ளாமல் முகக்கவசம் அணிவதை தவிர்க்கலாம் ஆகையால் அதிபர் முகக்கவசம் அணிய உத்தரவிடக்கோரி அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.



இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீடுகளை விட்டு வெளியே வரும் மக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்ற உத்தரவு நாடு முழுவதும் அமல-ில் உள்ளது.

ஆகையால் இந்த உத்தரவை பின்பற்றி அதிபர் போல்சோனரோ தனது வீட்டை விட்டு வெளியேறி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போது கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.

முகக்கவசம் அணியாமல் அதிபர் போல்சோனாரோ விதிமுறைகளை மீறும் பட்சத்தில் 2 ஆயிரம் ரியல்ஸ் அபராதம் செலுத்த வேண்டும் என நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

# காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத்தேடிய மற்றொரு தந்தையும் உயிரிழப்பு!

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடி வந்த இன்னுமொரு தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக வவுனியாவில் இன்று உயிரிழந்துள்ளார்.

காணாமலாக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகளின் உண்மை நிலையினை வெளிப்படுத்துமாறு கோரி வவுனியாவில் கடந்த 1222 நாட்களை கடந்து தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த போராட்டங்களில் கலந்து கொண்டு தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் சுகயீனம் காரணமாக இன்று உயிரிழந்துள்ளார். 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான விக்கினேஸ்வரன் என்பவரை தேடி வந்த செட்டிகுளம் பகுதியை சேர்ந்த திருநாவுக்கரசு(வயது69) என்ற தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை இடம்பெறவுள்ளது.

இதேவேளை தனது மகனைத்தேடி வவுனியாவில் இடம்பெற்றுவரும் குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த மற்றொரு தந்தையும் அண்மையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது




# COVID-19 லிருந்து மக்களை பாதுகாப்பாக வைத்திருக்க நீங்கள் மாற்றத்தை உருவாக்கியுள்ளீர்கள்

ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்ள நாம் அனைவரும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.



COVID-19 உங்களுக்கு உள்ளது என்று நீங்கள் கவலைப்படுகிறீர்கள் அல்லது வைரஸுக்கு ஆளாகியுள்ளீர்கள் என்றால் நீங்கள் **பரிசோதனை செய்துக்கொள்ளுங்கள்.**




**சமூக இடைவெளியை பயிற்சி செய்யுங்கள்,** இரண்டு மீட்டர் இடைவெளியில் இருங்கள்.



சமூக இடைவெளி விலகல் சவாலாக இருக்கும்போது **முகக் கவசம் அணியுங்கள்.**



**அடிக்கடி கைகளை கழுவுங்கள்.**

**உள்ளேயோ அல்லது வெளியேயோ , பாதுகாப்பாக இருங்கள். உயிர்களைக் காப்பாற்றுங்கள்.**

**ontario.ca/coronavirus** ல் மேலும் அறிந்து கொள்ளவும்
ஒன்டாறியோ அரசங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# 'நண்பன்' எனனும் புதியதோர் இணையத்தளம் சென்னை மாநகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது








'நண்பன்' – WORLD WIDE எனனும் புதியதோர் இணையத்தளம் கடந்த திங்கள்கிழமை (ஜூன் 22) சென்னை மாநகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சென்னை மாநகரின் அனைத்துப் பகுதியிலும் கொரோனா பாதிப்புகளின் காரணமாக கடுமையான பாதுகாப்பு மற்றும் வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் அனைத்தும் கடுமையான நடைமுறையில் இருந்தாலும் விசேட அனுமதியின் பேரில் இந்த அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது

மேற்படி நண்பன் இணையதளம் முதல் உலகலாவிய அனைத்து நண்பர்களின் பார்வைக்காக வெளிவரத் தொடங்கியது. நண்பர்கள் அனைவரும் ஆதரவு தருமாறு அன்புடன் நண்பன் இணையதளம் சார்பாக கேட்டுக்கொண்டதற்கிணங்க. விழாவில் மக்கள் மருத்துவர் திரு. கருணாநிதி, மலேசிய நண்பன் பத்திரிகையின் இந்திய செய்தியாளர் திரு. மொஹைதீன், கல்வி டுடே மாத இதழின் ஆசிரியர்



திரு. ராம சுப்பிரமணியன், முத்துச்சிதறல் மாதஇதழின் ஆசிரியர் திரு. முடிவை ராஜ குமார், ஓவியர் அய்யப்பன், லங்கா4 பிரதீப் மற்றும் நண்பன் இணையதளத்தின் இந்திய பொறுப்பாளர் திரு. அருண் கதாதரன் ஆகியார் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உலகின் பல நாடுகளிலிருந்தும் இணையவழி ஊடாக பல அன்பர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத்



தெரிவித்தனர். இங்கு காணப்படும் படங்கள் 'நண்பன்' இணையத்தளம் அங்குரார்ப்பண நிகழ்வில் எடுக்கப்பட்டவையாகும்.


STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# தற்போது கனடாவில் கிடைக்கின்றன "அம்மா" தயாரிப்புக்கள்!












# விழலுக்கு இறைத்த நீராக வாக்களித்தல் அமைந்து விடக் கூடாதுஎன்கிறார் டக்ளஸ் தேவானந்தா

தமிழ் மக்கள் தங்களுடைய எதிர்பார்ப்புக்களை அடைவதற்காக மேற்கொள்ளுகின்ற முயற்சிகள் மற்றும் நாம் அளிக்கப்போகும் வாக்குகள் ஆகியன விழலுக்கு இறைத்த நீராக மாறி விடக் கூடாது. எனவேஇ சரியான தரப்புக்களை மக்கள் அடையாளம் கண்டு கைகோர்த்து பயணிக்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பளை கிராமிய கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் இன்று இடம்பெற்ற சந்திப்பிலயே இதனைத் தெரிவித்தார்.

மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தேவையான கொள்கை மற்றும் அதனை அடைவதற்கான பொறிமுறை ஈ.பி.டி.பி. கட்சியிடம் மாத்திரமே இருப்பதாக தெரிவித்த டக்ளஸ் தேவானந்தாஇ ஏனைய கட்சிகளிடம் இலக்கினை அடைவதற்கான பொறிமுறை இல்லை என்பதையே சகல கட்சிகளின் கடந்த கால செயற்பாடுகள் வெளிப்படுத்தியுள்ளன.

எனவே மக்கள் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வீணை சின்னத்திற்கு வாக்களித்து தன்னுடைய கரங்களை பலப்படுத்துவார்களாயின் அபிவிருத்தி அன்றாடப் பிரச்சினைகள் அரசியல் தீர்வு போன்ற அனைத்தையும் பெற்றுத் தரமுடியும் என்று உறுதியளித்துள்ளார்.

நடைபெறவுள்ள நடாளுமனறத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் வோனந்தா. யாழ். தேர்தல் மாவட்டத்தில் வீணை சினனத்தில் 5 ஆம் இலக்கத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மொட்டுக் கட்சிக்கான விருப்பு வாக்கு மோதலில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தல் வேட்பாளர்களுக்கிடையில் முன்னுரிமை வாக்குகள் பெற்றுக்கொள்வது யார் என்பது குறித்து மோதல் நிலைமை உச்சத்தில் ,ருப்பதுடன் (21) ,டம்பெற்ற மோதலின் காரணமாக 04 பேர் வைத்தியசாலையில் அனுமத்திக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை தெனியாய பிரதேசத்தில் 21 காலை நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்கள் சந்திப்பில் அந்த கட்சியை சேர்ந்த வேறு சிலர் தாக்கியதன் காரணமாக காயமடைந்த கொடபொல பிரதேச சபையின் துணைத் தலைவர் சஞ்சீவ அறுக்கொட மானெல் ஆனந்த எம்.பி மற்றும் ஜீவன் லங்காதிலக்க மற்றும் மேலும் ஒருவர் தெனியாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை அகுநகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுள்ளது.



# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

நக்கீரன் -கனடா

இலங்கையின் 9 மாகாணங்களும் பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தமானவை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓர் அடி நிலம்கூட தமிழர்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ சொந்தம் இல்லை. இந்தநிலையில், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சொந்தப் பூமி என்ற நினைப்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் இடங்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்கு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி, பௌத்த மதத்துக்கென ஏற்கனவே இருக்கும் இடங்களுக்கு மேலாக ஓர் அடி நிலத்தைக்கூட கிழக்கில் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அண்மையில் சனாதிபதிக்கு நீண்ட கடிதம் எழுதியிருந்தார். அது தொடர்பாக ஞானசார தேரர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஞானசார தேரர் மேலும் பேசுகையில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலுள்ள 9 மாகாணங்களும் பௌத்த சிங்களவர்களுக்கே சொந்தமானவை. அதாவது முழு நாடும் பௌத்த சிங்கள பூமி. இதை நான் பல தடவைகள் எடுத்துரைத்துள்ளேன். வடக்கு, கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் என்பதற்காக அந்த மாகாணங்களை தமிழ்பேசும் மக்களின் சொந்தத் தாயகமாக அங்கீகரிக்க முடியாது. வடக்கு, கிழக்கு நிலங்களை அவர்களின் சொந்த நிலங்களாகக் கருத முடியாது.

உண்மையில் இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

இலங்கை பவுத்த நாடு, பவுத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு என்ற கூக்குரல் தென்னிலங்கை சிங்கள – பவுத்த பேரினவாதிகளால் உரத்த குரலில் ஒலிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே சிங்கள பேரினவாதத்தை கக்கிக் கொண்டிருக்கும் ஜாதிக ஹெல உறுமய, சுதந்திரத்துக்கான தேசிய இயக்கம் போன்ற கடும்போக்கு அமைப்புக்கள் மட்டும் அல்லாது பொது பல சேனா, சிகல ராவய, இராவண பலய போன்ற அமைப்புக்களும் களத்தில் இறங்கியுள்ளன.

இந்தப் பேரினவாத சக்திகளின் போர்க்கோலம் அய்ம்பதுகளில் தனிச் சிங்களத்துக்கு ஆதரவாக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த வரலாற்றுக் காட்சிகளை நினைவு படுத்துகிறது. சிங்களம் மட்டும் என்ற முழக்கம் அரசியலில் சிங்கள – பவுத்த மக்களதும் பவுத்தமத தேரர்களதும் மேலாதிக்கத்தை நிறுவியது. அதன் மூலம் அரசியல் மேலாண்மை சிங்கள – பவுத்தர்களது கைகளில் இருக்க வேண்டும் என்ற கோட்பாடு உறுதி செய்யப்பட்டது.

இந்தத் தனிச் சிங்களத்துக்கு ஆதரவாகத் திரண்டவர்களில் பெரும்பாலோர் இரமண்ண (Ramanna) மற்றும் அமரபுர (Amarapura) பவுத்தமத பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் ஆவர். இந்த பவுத்த பீடங்கள் சிங்கள கரையார், சலாகம மற்றும் துவார சமூகத்துக்கு உரியன. கண்டி தலதா மாளிகை சியாம் பவுத்த பீடங்களான மல்வத்தை மற்றும் அஸ்கிரியா (1764) இரண்டையும் சேர்ந்த சிங்கள ரதல (radala) மற்றும் கொவிகம (govigama – வெள்ளாளர்) சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருக்கின்றன. எனவேதான் சிங்கள கரையார், சலாகம மற்றும் துவார வகுப்புப்பைச் சார்ந்தவர்கள் அதற்குப் போட்டியாக இரமண்ண (1864) மற்றும் அமரபுர பவுத்மத பீடங்களை (1800) நிறுவினார்கள். அமரபுர மதபீடம் சாதி அடிப்படையில் மேலும் 21 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு பவுத்த நாடு அது பவுத்த – ஆரிய சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற கூக்குரல் சென்ற நூற்றாண்டிலும் ஒலித்தது. அதை ஒலித்தவர் டொன் டேவிட் ஹேவவிதாரனே (Don David Hewawitharane – September 17th, 1864) என்ற இயற்பெயரைக் கொண்ட தர்மபாலர் ஆவர். இவரது தந்தை டொன் கறோலிஸ் தளவாடக் கடை ஒன்றை நடத்தினார். சிங்கள வணிகர்களின் பண உதவியால் இயங்கி வந்த பவுத்த மறுமலர்ச்சி இயக்கம் அவர்களின் வணிக முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கியது. இவர்களைத் தேசபக்தர்கள் என்றும் நியாயமான வழியில் பணம் திரட்டுவோர் என்றும் புகழ்ந்தது. அன்றைய இலங்கையின் பணக்கார வணிகரின் மகனாக இவர் தேரவாத பவுத்தத்தை தழுவித் தன்னுடைய பெயரை அநகாரிக தர்மபாலர் என மாற்றிக் கொண்டார். இவருடைய கால கட்டத்திலே இலங்கையில் கிறித்தவ மதப் பரப்புரையாளர்கள் வடக்கிலும் தெற்கிலும் மதமாற்றத்தைச் செய்து கொண்டிருந்தனர்.

அநகாரிக தர்மபாலர் பவுத்த மேலாண்மை கருத்தியலை வளர்ப்பதற்குச் சிங்கள பவுத்தாய என்ற பெயரில் செய்தி ஏடு ஒன்றினை நடத்தினார். முஸ்லிம்களின் கடைகளைப் புறக்கணிக்கும்படி தனது செய்தித்தாளிலும் வெளியீடுகளிலும் வேண்டுகோள் விடுத்தார். சிங்கள பவுத்தாய என்ற சொற்றொடரை முதலில் புனைந்தவர் தர்மபாலரே!

சிங்கள நாவலின் தந்தை எனக் கூறப்படும் பியதாச சிரிசேன தனது சிங்கள ஜாதிய என்ற பத்திரிகையில் மேலைக் கலாசாரத்திற்கு எதிராக எழுதிய அதே வேளையில், சிங்களவர் அல்லாதோரைத் தாக்கி எழுதினார்.

தர்மபாலர் சிங்களவர் ஆரியர்கள் என்றும் அவர்கள் தனித்துவமான இனம் என்றும் அவர்கள் ஆரிய நாகரிகத்தைச் சார்பு படுத்துகிறார்கள் என்றும் அவர்களது உடலில் அடிமைக் குருதி ஓடவில்லை என்றும் அவர்களை புறச்சமயிகளான தமிழர் ஆகட்டும் மூன்று நூற்றாண்டு காலம் நிலத்தையும், புராதன கோயில்களையும் நூல்நிலையங்களையும் அழித்த அய்ரோப்பிய அழிவுக்காரர் ஆகட்டும் ஒரு போதும் சிங்களவர்களை வெற்றிகொள்ளவில்லை என்று எழுதினார்.

தர்மபாலர் கிறித்துவ மதப்பரப்புரையாளர்களுக்கு மாற்றாக பவுத்தத்தை முன்வைத்ததோடு மட்டுமல்லாது சிங்கள மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். எல்லா மதங்களிலும் பவுத்த மதமே உயர்ந்தது என்று வாதிட்டார். இந்தியா போன்ற இடங்களில் இருந்து வந்து இலங்கையில் வியாபாரம் செய்தவர்களை அநியாயமாகப் பணம் சம்பாதிப்போர் எனக் கடுமையாகச் சாடினார்.

எப்போதும் சிங்களவருக்கு முஸ்லிம்கள் பகைவர்களே! இந்தியாவில் பவுத்தத்தின் வீழ்ச்சிக்கு முஸ்லீம்களே காரணம் என்றார். முஸ்லீம்கள் ஏமாற்றிச் சம்பாதிக்கிறார்கள், மண்ணின் மைந்தர்களான சிங்களவர்கள் ஏமாற்றப் படுகிறார்கள் என எழுதினார். ஆரிய சிங்களவர்களின் புனித பூமியான இலங்கை இந்துக்களாலும் முஸ்லிம்களாலும் கிறித்தவர்களாலும் அழித்தொழிக்கப்பட்டது எனவும் அதைக் காப்பது சிங்கள – பவுத்தர்களது கடமை எனவும் பரப்புரை செய்தார். அவரது எண்ணத்தின்படி இலங்கையில் தமிழர், முஸ்லிம் ஆகியோருக்கு இடமில்லை. கிறித்தவ சிங்களவர்களையும் அவர் சிங்களவர் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

தர்மபாலர் தான் நடத்திய சிங்கள பவுத்தாய செய்தி ஏட்டின் வாயிலாக "முஸ்லிம் கடைகளைப் புறக்கணியுங்கள், அப்படி முஸ்லிம் கடைகளைப் புறக்கணிப்பவர்கள் மட்டுமே நாட்டின் உண்மயான தேச பக்தர்கள்" என்று எழுதினார்.

அவர் மேலும் "பிரித்தானியருக்கு ஜெர்மானியர் எவ்வாறோ, சிங்களவருக்கு முஸ்லிம்களும் அவ்வாறே. முகமதியர், சிங்களவருக்கு சமயத்தாலும் இனத்தாலும் மொழியாலும் அந்நியர்கள். பவுத்த சமயம் இல்லாவிடின் மரணத்தையே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர்கள் சிங்களவரைச் சுடலாம் தூக்கிலிடலாம் சிறைபிடிக்கலாம். ஆனால், எப்போதும்

*(தொடர்ச்சி 16ம் பக்கம்)*

கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கைகால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

மலேசிய மடல்:

# கோலாலம்பூரில் இந்தியத் தொழிலாளர்கள் பரிதவிப்பு: இந்திய நடுவண் அரசு பாராமுகம்



நக்கீரன்


கோலாலம்பூர், ஜுன் 25:

மலேசியாவில் உள்ள இந்தியத் தொழிலாளர்கள் விடயத்தில் இந்திய நடுவண் அரசு பாராமுகமாக இருப்பது ஒருபுறம் இருக்க அவர்களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்குவதாக சம்பந்தப்பட்டவர்கள் வேதனைத் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக வருமானத்தை இழந்திருப்பதுடன் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற நிலையையும் இவர்கள் எதிர்கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலையில் இந்தத் தொழிலாளர்கள் தத்தம் கடப்பிதழைப் புதுப்பிக்கும் நடவடிக்கை ஈடுபடும் நேரத்தில் புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா சிக்கலால் கடந்த சில மாதங்களாக இந்தியத் தூதரகம் பொது நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருந்தது.

இதனால், விசா முடிந்தவர்களும் வேலை பார்ப்பதற்கான பெர்மிட்டைப் புதுப்பிக்க வேண்டியவர்களும் நாடு முழுவதிலும் இருந்து கோலாலம்பூரை முற்றுகை இட்டனர்.




ஆனால் புதிய நடைமுறையை அமல்படுத்தி இருப்பதால் நாட்டின் தென்கோடி முனையான ஜோகூர், வடமுனையான பினாங்கில் இருந்தெல்லாம் பலநூறு கிலோமீட்டரைக் கடந்து கணவன் மனைவி குழந்தை என குடும்பத்துடன் வந்தவர்களெல்லாம் பரிதவிப்பிற்கு ஆளாகி நிற்கின்றனர். இந்தச் சூழலில் தங்களின் கடப்பிதழ் தொடர்பான பிரச்சனைகளுக்கு வழிகாண முடியாமல் இருக்கும் இந்தியத் தொழிலாளர்கள் தாங்கள் எதிர்நோக்கும் அவலத்திற்கு இந்தியத் தூதரகம் விரைவில் தீர்வு காண வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 4 மாதங்களாக கோவிட் 19 நோய்த் தொற்று காரணத்தால் கடப்பிதழ் புதுப்பித்தல் தொடர்பான பணிகள் எதுவும் இந்தியத் தூதரகத்தால் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் கடந்த திங்கள் முதல் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்படுவதாக அறிவிப்பு வெளியானது.

இதனைத் தொடர்ந்து கடப்பிதழ் புதுபித்தல் பணியை மேற்கொள்ளும் பிஎல்எஸ் இண்டெர்நே'னல் நிறுவனத்தை இந்தியத் தொழிலாளர்கள் முற்றுகையிட்டனர். அலுவலகத்திற்கு நேரடியாக சென்று கடப்பிதழைப் புதுப்பிக்கும் முறையை திங்கள் முதல் மாற்றியமைத்த நிர்வாகம் புதிதாக முன்பதிவு முறையை நடைமுறைப் படுத்தியது.

இதன் மூலம் நேற்று முன்பதிவு செய்தவர்கள் தங்களின் கடப்பிதழைப் புதுப்பிக்க சென்றபோது அவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அறிவிப்பு செய்தனர் பிஎஸ்எல் நிர்வாகத்தினர்.

உங்கள் அனைவரின் முன்பதிவும் ரத்து செய்யப்பட்டுள்ளது. புதிய முறையில் நீங்கள் எங்கள் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும் என அறிவித்தனர். இந்தியாவிலிருந்து இங்கு பணிபுரிய வந்துள்ளவர்கள் அனைவருமே கல்வியறிவு பெற்றவர்கள் என இந்தியத் தூதரகம் நினைக்கிறதா எனத் தெரியவில்லை.

ஏன் இந்த குழப்பம் எனவும் புரியவில்லை.



ஏற்கெனவே இருந்த பழைய முறையில் ஓர் இந்தியத் தொழிலாளர் தன் கடப்பிதழைப் புதுப்பிக்கச் (புதுப்பிக்கும் கட்டணம் வெ. 350, விண்ணப்படிவம் பூர்த்தி செய்ய வெ. 42, புகைப்படம் எடுக்க வெ. 26, முன்பதிவு மேற்கொள்ள வெ 30, இவற்றுடன் போக்குவரத்து செலவும் உள்ளது) சென்றால் ஏறக்குறைய தன்னுடைய அரை மாத சம்பளத்தை செலவழிக்கும் நிலையில் தற்போதைய முறையில் கூடுதல் செலவினத்திற்குஇந்தியத் தூதரகம் வழி வகுத்துள்ளது. இது எப்படி இருக்கிறது என்றால், எரிகிற வீட்டில் கிடைக்கிறது வரை லாபம் எனபது போல் தெரிகிறது.

அதேவேளை ம்லேசிய அரசாங்கம் இக்கட்டான இந்த சூழ்நிலையில் அந்நியத் தொழிலாளர்களின் லெவிக் கட்டணத்தில் 25ழு கழிவு வழங்கியுள்ள நிலையில் இந்தியத் தூதரகம் தங்களின் குடிமக்களிடம் கரிசனமாகா நடந்து கொள்வதற்குப் பதிலாக இலாப நோக்கில் செயல்படுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. தினம்தினம் புதிதாக அறிவிப்பு செய்துவரும் இந்தியத் தூதரகத்தின் இதுபோன்ற அறிவிப்புகளால் ஏற்கெனவே நோய்த் தொற்று பயம், வேலையின்மை, சம்பளக் குறைவு, பணிபுரிவதற்கான பெர்மிட்டை புதுப்பிக்க முடியாத சூழ்நிலை என்றெல்லாம் மன உளச்சலில் உள்ள இந்தியத் தொழிலாளர்கள் அவலத்தை எதிர்நோக்கி இருக்கும் நிலையில் இந்திய அரசின் இந்தப் புதிய முன்பெடுப்ப் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும்.

எனவே, இந்தப் புதிய முறைகளை மாற்றி பழைய முறையிலேயே எளிமையாக கடப்பிதழைப் புதுப்பிக்க வழி ஏற்படுத்தித் தருமாறு இந்தியத் தூதரகத்தைக் கேட்டுக் கொள்வதாக பாதிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

SHANGARA DEVI ASTROLOGY & PSYCHIC CENTER
Master. GURU SWAMY


Most Powerful Spiritualist from India
We can Handle any Problem Are you depressed & Lonely?
உங்கள் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி
உங்கள் கை, முகம், நகம்,குறிப்புப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.
All Religions welcome. 100% Guaranteed Result
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck &Jadoo & Give 100%,Life Long Protection
Open 7 days
10am -8pm
Name & Date of Birth - Horoscope
Hand Reading
Past, Present & Future
Overseas & Travel
Marriage, Family Matters
Husband -Wife Problems - Divorce
Children Education
Children Mistakes
Property, Court Problems
Face Reading
Love & Money Problems
Education & Work
sexual Problem
Jealousy & Black Magic
Health & Business
Evil affection
செய்வினை கோளாறா,
பேய் பிசாசு தொந்தரவா,
எதிரிகள் தொந்தரவா,
கண் திருஷ்டி, நாகதோசம்,
காதல் விவகாரங்கள்,
தொழில், மனை அபிவிருத்தி,
வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கு
தீர்வு காண அழையுங்கள்.
www.shankaraguruji.com
647-763-5262
1415 Kennedy Road Unit #7, Scarborough, M1P 2L6
New Quality Bakery (upstair) Near Royal Bank (Kennedy& Ellesmear)

# கொரோனா' சிகிச்சைக்கான 'கோவிஃபர்' மருந்து விற்பனையைத் தொடங்கியது, இந்தியாவின் ஹெட்ரோ நிறுவனம்




கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் உயிர் காக்கும் மருந்தாகக் கருதப்படும் 'கோவிஃபர்' மருந்து விற்பனையை ஹெட்ரோ நிறுவனம் இன்று தொடங்கியுள்ளது. முதல் கட்டமாக 20 ஆயிரம் மருந்துகள் விற்கப்பட உள்ளன. இதில் 10 ஆயிரம் மருந்துகள் டெல்லி, ஹைதராபாத், தமிழகம், மும்பை உள்ளிட்ட கொரோனாவில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட நகரங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஊசி மூலம் மனிதனின் ஐ.வி.(நரம்பு) வழியாகச் செலுத்தப்படும் 100 எம்ஜி அளவு கொண்ட ஒரு மருந்தின் விலை ரூ.5,400 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸாஸ் பாதிக்கப்பட்டோருக்கு ஆயுர்வேத மருந்துகளும், வழக்கமான பொது மருத்துவ மருந்துகளும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் து கொரோனாவுக்கென பிரத்யேக மருந்து ஒன்றை ஹெட்ரோ நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. 'கோவிஃபர்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த மருந்து அமெரிக்க மருந்து தயாரிப்பு நிறுவனமான கிலீட் நிறுவனத்தின் ரெம்டெசிவிர் (Gilead's Remdesivir) மருந்தின் ஒரு வகையாகும்.

ரெம்டெசிவிர் மருந்துக்கு ஐரோப்பிய மருந்து ஆணையமும், அமெரிக்க மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையமும் அனுமதி அளித்துள்ளன. இந்நிலையில் இதன் ஒரு வகை மருந்தை இந்தியாவில் ஹெட்ரோ நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த மருந்தின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையம் கடந்த 13ம் தேதி அனுமதி வழங்கியது. ஹெட்ரோ நிறுவனத்தின் மேலாளர் இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி நிருபர்களிடம் கூறுகையில், "கொரோனா வைரஸ் நோயாளிகளின் உயிர்காக்கும் மருந்தான ரெம்டெசிவிர் மருந்தைப் போல் உருவாக்கப்பட்ட 'கோவிஃபர்' மருந்து அவசர நேரத்தில் மருத்துவர்களின் ஆலோசனைப்படி பயன்படுத்தும் மருந்தாகும்.

முதல் கட்டமாக 20 ஆயிரம் மருந்துகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட உள்ளன. முதல் கட்டமாக கொரோனா பாதிப்பு அதிகமாக இருக்கும் மும்பை, டெல்லி, தமிழகம், குஜராத், ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களுக்கு 10 ஆயிரம் மருந்துகள் அனுப்பி வைக்கப்பட உள்ளன. 2வது 10 ஆயிரம் மருந்துகள் கொல்கத்தா, இந்தூர், போபால், திருவனந்தபுரம், ராஞ்சி, புவனேஷ்வர், லக்னோ, பாட்னா, விஜயவாடா, கொச்சின், கோவா உள்ளிட்ட நகரங்களுக்கு அடுத்த வாரத்தில் அனுப்பி வைக்கப்படும்.

இந்த அவசரக் காலத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும் இந்த மருந்து பயன்பாட்டுக்கு வந்துவிட்டால் நோயாளிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலம் குறையும் என நம்புகிறோம். மருத்துவர்களுக்கு இருக்கும் நெருக்கடியும் குறையும். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கும் வகையில் மத்திய அரசுகள், மாநில அரசுகள், மருத்துவ நிபுணர்கள் ஆகியோருடன் தொடர்ந்து பேசி வருகிறோம். 100 மில்லிகிராம் அளவில் வரும் 'கோவிஃபர்' மருந்துகளை மருத்துவர்களின் ஆலோசனையின் மூலம் அவசரநேரத்தில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த மருந்தின் மூலம் நிச்சயம் உயிரிழப்பு குறையும் என நம்புகிறோம்" எனத் தெரிவித்தார்.

'கோவிஃபர்' மருந்துகளை கொரோனா நோயாளிகளின் கடைசிக் கட்டத்தில் மருத்துவர்கள் ஆலோசனைப்படி பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளைக் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், நீண்டநோய்கள் உள்ளவர்கள் நுரையீரல் நோய், கல்லீரல் பிரச்சினை உள்ளவர்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

# தமிழகத்தில் ஒரே நாளில் 3,509 பேருக்கு கொரோனா தொற்று உறுதி தமிழக சுகாதாரத்துறை அறிவிப்பு

தமிழகத்தில் ஒரே நாளில் 3,509 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.




தமிழக சுகாதாரத்துறை வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, தமிழகத்தில் ஒரே நாளில் 3,509 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 70,977 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 8 நாட்களாக தமிழகத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்து பதிவாகி வந்த நிலையில் இன்று 3 ஆயிரத்தை கடந்துள்ளது.

சென்னையில் மட்டும் 1,834 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்னையில் பாதிப்பு எண்ணிக்கை 47,650 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 131 பேர் வெளிமாநிலங்களில் இருந்தும் 20 பேர் வெளிநாடுகளில் இருந்தும் வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் வியாழக்கிழமை 32,543 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

சென்னையை அடுத்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் இன்று 191 பேருக்கும், காஞ்சிபுத்தில் 98 பேருக்கும், திருவள்ளூர் மாவட்டத்தில் 170 பேருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதுதவிர தமிழகத்தின் பிற மாவட்டங்களில் அதிகபட்சமாக இன்று ராமநாதபுரத்தில் 140 பேருக்கும், மதுரையில் 204 பேருக்கும், வேலூரில் 172 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்று 45 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர். இதனால் தமிழகத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 911 ஆக உயர்ந்துள்ளது. இதில் சென்னையில் மட்டும் 694 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தமிழகம் முழுவதும் வியாழக்கிழமை 2,236 பேர் கொரோனா சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலமாக கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 39,999 ஆக அதிகரித்துள்ளது. தற்போது தமிழகம் முழுவதும் 30,064 பேர் கொரோனா சிகிச்சை பெற்று வருவதாக தமிழக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.


# இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பேர் அமெரிக்காவில் நீச்சல் குளத்தில் மூழ்கி பலி

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பேர் அமெரிக்கா நியூஜெர்சியில் புதிதாக கட்டப்பட்ட நீச்சல் குளத்தில் இறந்து கிடந்தனர்

அமெரிக்காவின் நியூசெர்சி நகரி வசித்து வந்த இந்தியா வம்சாவளியைச் சேர்ந்தவர் பாரத் படேல் (வயது 62) அவரது 33 வயது மருமகள் நிஷா படேல் மற்றும் அவரது 8 வயது மகள் ஆகியோர் தங்கள் வீட்டின் பின்பகுதியில் புதிதாக கட்டப்பட்ட நீச்சல் குளத்தில் இறந்து கிடந்தனர். இதுகுறித்து அக்கம்பக்கத்தினர் கொடுத்த தகவலில்ன் பேரில் போலீசார் வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதல் கட்ட விசாரணையில் அவர்கள் நீரில் மூழ்கி இறந்ததாக முடிவு செய்யப்பட்டு உள்ளதாக கூறப்பட்டு உள்ளது.

அந்த குடும்பத்தினர் கடந்த மாதம் தான் ஐந்து படுக்கையறை வீட்டை விலைக்கு வாங்கி உள்ளனர். இறக்கும் போது மற்ற குடும்ப உறுப்பினர்கள் வீட்டிற்குள் இருந்ததாக கூறப்படுகிறது.

# போலி இபாஸ் தயாரித்து ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனை சென்னையில் அரசு அதிகாரிகள் உள்பட 5 பேர் அதிரடி கைது




சென்னையில் போலி இபாஸ் தயாரித்து ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனை செய்ததாக அரசு அதிகாரிகள் 2 பேர் உள்பட 5 பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

கொரோனா தாக்குதலையொட்டி சென்னையில் இருந்து வெளி மாவட்டங்கள், வெளிமாநிலங்கள் செல்வதற்கு அரசு இபாஸ் வழங்கி வருகிறது. 'ஆன்லைன்' மூலம் விண்ணப்பித்தால் மருத்துவம், திருமணம் மற்றும் இறப்பு காரியங்களுக்கு இபாஸ் வழங்கப்படுகிறது. இதனை அரசு அதிகாரிகள் துணையோடு போலியாக தயாரித்து ஒரு கும்பல் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருவதாக ஏற்கனவே புகார்கள் வந்தன.

'இபாஸ்' தயாரித்து விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கனவே சென்னை போலீஸ் கமிஷனர் ஏ.கே.விஸ்வநாதன் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தநிலையில் சென்னை அண்ணாசாலையை சேர்ந்த துரைராஜ் (வயது 29) என்பவர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார். அந்த புகார் மனுவில், போலி ஆவணங்கள் மூலம் சிலர் இபாஸ் தயாரித்து பொதுமக்களுக்கு ரூ.2 ஆயிரத்துக்கு விற்பனை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை மத்திய குற்றப்பிரிவின் 'சைபர் க்ரைம்' போலீசாருக்கு, கமிஷனர் ஏ.கே. விஸ்வநாதன் உத்தரவிட்டார். இதுதொடர்பாக 'சைபர் க்ரைம்' இன்ஸ்பெக்டர் துரை, 'தொற்று நோய் தடுப்பு' சட்டப்பிரிவு 269 மற்றும் 'பேரிடர் மேலாண்மை' சட்டப்பிரிவு உள்பட 5 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்.

போலி இபாஸ் தயாரிப்பு வழக்கில் சென்னை பேசின்பிரிட்ஜ் வருவாய் ஆய்வாளர் குமரன், எம்.கே.பி.நகர், வியாசர்பாடி இளநிலை வருவாய் ஆய்வாளர் உதயகுமார் மற்றும் கோபி (35), மனோஜ்(30), வினோத்(37) ஆகிய 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்கள் 5 பேரும் எழும்பூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். போலீஸ் விசாரணையில் இவர்கள் 100க்கு மேற்பட்டவர்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் பெற்றுக்கொண்டு போலி இபாஸ் தயாரித்து வழங்கியதாக தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தமிழகம், இந்தியா, சினிமா மற்றும் உலக நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள இணைந்திருங்கள் நமது நண்பன் இணையதளத்துடன்.
இணையதள முகவரி:
https://nanban.ca

## மொன்றியால் "வீணை மைந்தன்" கே.ரி. சண்முராஜா எழுதும்

# #1 'தமிழ்ச் சினிமாவில் கலை-கலாச்சார பண்பாட்டு விழு மியங்கள்'

தமிழ்ச் சினிமாவிற்கு தற்போது வயது எண்பத்து ஒன்பது (89).

முதல் தமிழ்ப் பேசும் படம் "காளிதாஸ்" வெளிவந்த ஆண்டு 1931 ஆகும்.

1932 இல் காலவா,பாரிஜாத புஸ்பகாரம், ராமயணம், ஹரிச்சந்திரா, என நான்கு படங்கள் வெளியாயின.



பழம்பெரும் நடிகர் தியாகராஜ பகவாதர்

சினிமா என்றால் ஒரு கெட்டவார்த்தை. அதில் பங்கு வகிப்பவர்கள் "தீண்டத்தகாதவர்கள்" தீட்டுள்ள சமாச்சாரம் என்று பேசப்பட்ட காலத்தில், 1933 இலிருந்து வெளியான படங்களின் தொகை ஆண்டுதோறும் அதிகரிக்கத் தொடங்கின.

இவ்வாறாக ஆண்டு தோறும் வெளிவந்த படங்களின் எண்ணிக்கை 1946 வரை சுமார் 345 என்பது எனக்குக் கிடைத்த தகவல்.

இத்தனை திரைப்படங்களை தயாரிக்க அந்தக் காலத்தில் பல சவால்கள் இருந்திருக்க வேண்டும்.

வெளியான திரைச் சித்திரங்கள் அனைத்தும், பெரும்பாலும் புராண, இதிகாச, வரலாற்று, படங்களாகவும் ராஜா-ராணி கதைகளாகவும் காட்சிப்படுத்தப்பட்டன என்பதே உண்மை.

படத்தில் தோன்றி நடித்தவர்கள் அல்லது பாடுபவர்கள் (அநேகமாக பாடல்களே படமாக்கப்பட்டன) நாடக மேடைகளிலிருந்தோ அல்லது கதாகாலட்சேபம் செய்தவர்களாகவோ அநேகமாக அறிமுகமானார்கள்.

அவர்களில் இரண்டு சுப்பர் ஸ்ரார்கள் முக்கியமானவர்களாகத் திகழ்ந்தார்கள். ஒருவர் எம்.கே.ரி எனப்படும் தியாகராஜ பாகவதர், மற்றவர், பி. யு. சின்னப்பா.

1944ல் வெளியான "ஹரிதாஸ்" படமானது, பாகவதரின் பாடல்களுக்காகவே சென்னை "புறோட்வே" திரையரங்கில் தொடர்ந்து 768 நாட்கள் ஓடியது. முக்கியமாக மூன்று தீபாவளி தினங்களை கண்ட படம் என்ற சாதனையையும் இந்தப் படம் தட்டிக்கொண்டது.



நடிகர் சிவாஜி கணேசன்

பின்னாளின் இரு திலகங்களின் படங்கள் கூட இந்தச் சாதனையை முறியடிக்கவில்லை.


1944ம் ஆண்டிலிருந்து திரைப்படங்களில், சமூகக் கதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இடையிடையே புதிய நடிக நடிகைகளின் வரவால் புராண இதிகாச படங்கள், புதிய இயக்குனர்களின் இயக்கத்தில் வெளிவந்தன.

1952 இல், வெளியான சிவாஜி கணேசன் நடித்த "பராசக்தி" படம் தமிழ்த் திரை உலகை வேறு திசையில் மாற்றம் காண வைத்தது.

இந்த மாற்றம், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, ஆகியோரின் எழுத்தாற்றலால் ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது.

தொடர்ந்து, பகுத்தறிவுச் சிந்தனைகள் எழுத்துருவில் ஏற்படுத்திய அதிர்வுகள் இவையாகும்.

அண்ணாவினதும் கலைஞரினதும் கற்பனையில் உருவாகிய கதாபாத்திரங்களை ஏற்று நடித்தவர்களுள் நடிகர் திலகமும் மக்கள் திலகமும் முக்கியமானவர்கள்.




நடிகர் ரி.ஆர் மகாலிங்களம்

நமது நடிகர் திலகம் அவர்கள் திரையுலகிற்கு அறிமுகமான காலகட்டத்தில் திரைப்படத்துறையில் சிறிது பின்னடைவு நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு "இருண்ட காலம்" என்றே சொல்ல வேண்டும்.

இக்காலத்தை சிவாஜிக்கு முன் என்போம். ஏனென்றால், வீழ்ச்சியடைந்திருந்த திரைப்படத்துறையில் அதுவரையில் தமக்கென தனியிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, எனக்கு நிகர் எவருமில்லை இலர் என வலம் வந்த எம்.கே.ரி பாகவதரும் பி.யூ. சின்னப்பாவும் புகழ் மங்கி சற்றே பின்னடைவை அடைந்திருந்த காலம் அது.

மேற்சொல்லப்பட்ட இருவரின் இடங்களையும் நிரப்புவதற்கென உள்ளே கொண்டுவரப்பட்ட ஒரு சிலரும் தோல்வி கண்ட நிலையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒரு சில வெற்றிப் படங்களைத் தந்து கொண்டிருந்த தமிழ்க் கதாநாயகர்களான, பி. எஸ். கோவிந்தன், எம். எம். குமரேசன், எம். கே. ராதா, ஆர். ரஞ்சன், கே. ஆர்.ராமசாமி, ரி.ஆர். மகாலிங்கம், நரசிம்மபாரதி, எம்.என்.கண்ணப்பா, முத்துக்கிருஸ்ணன் எனப் பலரும் முயன்று பார்த்தும் தமிழ்த் திரை உலகின் இருளைப் போக்கமுடியவில்லை.



நடிகர் எம்.ஜி.ஆர்

அப்போது தெலுங்குப் படவுலகில் முடி சூடா மன்னர்களான என்.டி. ராமராவ், ஏ. நாகேஸ்வரராவ், ஆகியோர் தமிழ்க் கதாநாயகர்களாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த 1952ம் ஆண்டுக் காலப் பகுதியில், வெளிவந்த "பராசக்தி" என்னும் அற்புதமான படம், புயல்வேகம் கொண்ட நாயகனாம் சிவாஜி கணேசன் அவர்களை நமக்கெல்லாம் அறிமுகம் செய்து வைத்தது.



பி. யு. சின்னப்பா- பழம்பெரும் நடிகர்

வெறும் கர்நாடக இசையில் அமைந்த பாடல்களையும் நமுத்துப் போன வசனங்களையும் பேசி நடித்த நாயகர்களுக்காகவும் ஒரு நடிப்பு விருந்தை தனது கனல் தெறிக்கும் உரை வீச்சுக்களினாலும், உணர்ச்சி மிகு உடல் மொழிகளினாலும் இரசிகர்களை கட்டிப்போட்ட நடிகர் திலகமும், அவருக்கு இணையாக குணசித்திர பாத்திரங்களை ஏற்று நடித்த நடிக நடிகையர்கள் தமிழ்த் திரைப்படங்களின் ஊடாகக் காட்சிப்படுத்திய பண்பாட்டு காட்சிகளையும் பாடல் ஆசியர்களின் மெல்லிசை கீதங்களையும், தமிழ் மொழியின் சுவையையும் இரசிக்க வைத்து எமது தமிழர் குடும்பங்களின் அறமாக விளங்கும் அன்பு, பாசம், காதல், கருணை, இறைஉணர்வு தேசபக்தி, என நல்லொழுக்க விழுமியங்களை அடுத்த வரும் தொடர்களில் காட்சிப்படுத்துவோம்.

--------------------------------------------------------

வீணைமைந்தன்

(அடுத்த "காட்சி" ஏழு நாட்கள் கடந்து...)

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

*( 13ம் பக்கத் தொடர்ச்சி)*

சிங்களவருக்கு முஸ்லிம்கள் பகைவர்களே. அந்நியரால் இழைக்கப்படும் அவமானங்களை இனியும் பொறுக்க முடியாது என்பதை அமைதிமிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்துவிட்டனர். முழுத் தேசமும் முஸ்லிம்களுக்கு எதிராக எழுச்சியுற்றுவிட்டது. இதற்குப் பொருளாதார ஆன்மீக அடிப்படையில் காரணங்கள் இருந்தன" என்று முஸ்லிம்கள்மீது வெறுப்பைக் கொட்டினார்.

1915 சிங்கள – முஸ்லிம் கலவரம்

மே 29, 1915 இல் சிங்களவர் – முஸ்லிம் கலவரம் கண்டியில் வெடித்தது. இதுவே முஸ்லிம்கள் மீது சிங்களவர்களால் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் ஆகும். ஒரு பவுத்தமத விழா ஊர்வலம் மசூதிக்கு அருகாமையில் போவதை முஸ்லிம்கள் ஆட்சேபித்ததன் விளைவாகவே கலவரம் வெடித்தது. ஒன்பது நாள்கள் நீடித்த இந்தக் கலவரம் மத்திய, வட மேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் சம்புரகாமுவ போன்ற மாகாணங்களுக்குப் பரவியது. மாத்தளை, வட்டகம, கடுகண்ணாவ, கம்பொல, இரம்புக்கான, பாணத்துறை மற்றும் அக்குராசா போன்ற நகரங்களில் ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் ஒன்றுதிரண்டு முஸ்லிம்களையும் அவர்களது கடைகளையும் தாக்கினார்கள். சில இடங்களில் முஸ்லிம்கள் சிங்களவர்களைத் திருப்பித் தாக்கினார்கள். இத் தாக்குதலில் 25 க்கும் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 189 முஸ்லிம்கள் காயப்பட்டார்கள். நான்கு முஸ்லிம் பெண்கள் பாலியல் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். 250 கடைகள், வீடுகள் எரியூட்டப்பட்டன. 4,075 கடைகள், வீடுகள் சூறையாடப்பட்டன.

அநகாரிக தர்மபாலர் சிங்கள இனத்தின் புகழைப் புதுப்பித்தவர் என்றும் பவுத்த மதத்தை மீள் எழுச்சி கொள்ளச் செய்தவர் என்றும் சிங்கள – பவுத்தர்களால் கொண்டாடப்படுகிறார். அநகாரிக தர்மபாலர் சிங்கள மக்களைச் சிலாகித்துச் சொல்லும் போது "சிங்களவர் பழைய வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஆரிய இனத்தின் இனிமையான, மென்மையான, மிருதுவான பிள்ளைகள்.....இற்றை நாளில் உலகில் எமது நாட்டைப் போன்று ஒளிமிக்க வரலாறு கொண்டிருந்த நாடு வேறு எதுவும் இல்லை.... ...சிங்களவர்களது நாட்டை சிங்களவர்கள்தான் ஆள வேண்டும் (The sweet, tender, gentle Aryan children of an ancient, historic race. No nation in the world has had a more brilliant history than ourselves. The country of the Sinhalese should ruled by the Sinhalese. Sri Lanka and Tamil National Struggle – Chapter 4) எனக் கூறினார்.

"சிங்களம்" ஆரிய மொழி என்ற கோட்பாட்டை முன்வைத்து அதன் மூலம் சிங்களவர்கள் ஆரியர்கள் என்ற கருத்தை சிங்கள – பவுத்த பேரினவாதிகள் மறைமுகமாகச் சுட்டிக்காட்டத் தலைப்பட்டனர். இந்தச் சுட்டிக் காட்டுதல் மூலம் ஆரிய சிங்கள இனத்தவர் திராவிட இனத்தவற்கு மேலான உயர்குடிப் பிறப்பாளர்" என வாதிக்கலாயினர். (வளரும்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்

902



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### - மட்டக்களப்பு -

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.


செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆண்டுச் சடங்கின்போது, விநாயகர் பானையைத் தவிர வேறு பொங்கல் இடம்பெறுவதில்லை. திங்கட்கிழமை திருக்குளிர்த்திக்காக விநாயகர்பானை பொங்கப்படும். இப்பொங்கலுக்குரிய மூன்று பானையை மண்பானை வனைவோரிடம் சொல்லி, சித்திரவேலைப்பாடுகளுடன் பிரத்தியேகமாகச் செய்வர். தமது நேர்த்திகள் நிறைவேற மடிப்பிச்சை பெறுவது வழக்கம். இவ்வாறு கண்ணகைஅம்மனுக்கு மடிப்பிச்சையாக வந்த நெல்லை மூன்று பானைகளிலும் நிரப்புவர். இம்மூன்று பானைகளையும் தலையில் தாங்கி மேளதாளத்துடன் கோயிலை வலம் வந்து, ஆலய முன்றலிலே வெள்ளை விரித்து. உரலில் குற்றிப் பச்சைஅரிசி எடுக்கப்படும். நேர்த்திக்கடன் வைத்த பெண்களேநெல்குற்றி அரிசி எடுப்பர். மூன்று பானைகளுள் பெரிதான பானையை நடுவில் வைத்து சிறிய பானைகள் இரண்டையும் பெரிய பானையின் இருபுறமும் வைப்பர். பின்னர் ஆலய முகப்பிலே அடுப்புமூட்டி பொங்கல் நடைபெறும். நடுப்பானையில் பால்பொங்கி வரும்போது, கட்டாடியார் கொட்டுவம் கட்டிப் பால் எடுத்து அம்மனுடைய முந்தானை மடையிலே பத்திரப்படுத்துவார். குளிர்த்தி முடிவுற்ற பின்னர் முட்டி கூறுதல் நிகழ்கின்றது. தேசம், வன்னிமை, குடி, கோத்திரம், வண்ணக்கர். கடக்கண்டவர், தலைமைக்காரர் முதலியோரைக் கௌரவப்படுத்தும் நோக்கில் இச்செயல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரியாரைக் கட்டாடியார் என்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன்கோயில் தோன்றிய காலம் முதல், பரம்பரை பரம்பரையாக இவர்களது சேவை இக்கோயிலிலே இடம்பெற்று வருகின்றது. ஆரம்பகாலத்திலே வளர்ச்சியடையாதநிலையில் இக்கோயில் இருந்தபொழுது, கண்ணகி அம்மன் சிலை, மற்றும் கோயிலுக்குரிய பொருட்களைப் பாதுகாக்கும்பொறுப்பை இவர்களே ஏற்றுள்ளனர்.

ஈழமெங்கும் கண்ணகி அம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்கள் யாவற்றிலும் ஒரேமாதிரியான சடங்குமுறைகள் கடைப்பிடிக்கப் படுவதில்லை. நாட்டு வழமை, ஆதிதொட்டுக் கடைப்பிடிக்கப்படும் பாரம்பரிய விதிமுறைகள் இவற்றின் அடிப்படையிலேயே கண்ணகி கோயில் சடங்குகள் ஊருக்கு ஊர் வேறு பட்டுக் காணப்படும். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் பொறுப்பை ஏற்பவர் குரு சீடர் பரம்பரையில் பயிற்றப்பட்டுப் பின்னரே கோயில் சடங்குகளை நடத்தும் தகுதியைப் பெறுகின்றார். கட்டாடியாரின் பரம்பரையில் உள்ளவரும், ஆசாரசீலரும், கல்வியறிவும், கோயில் சடங்கு விதிமுறைகள் தெரிந்தவரும், பரம்பரை வாரிசுமாக உள்ளவரே கோயில் பொறுப்பை ஏற்கத் தகுதி பெறுகின்றார். இவ்வாறு நியமிக்கப்படுமுன் தனது வம்சத்திலுள்ள பெரியவர்களது ஆலோசனை, அனுமதியுடன், பூசாரியாக நியமிக்கப்படுபவரை தலைமைக் கட்டாடியார் படிகடக்கவைத்து, செட்டிபாளையம் கண்ணகிஅம்மன் கோயிலில் பூசகராகும் தலைமையினை வழங்குவார். கண்ணகி அம்மனுடைய மூலத்தானக் கதவு நிலைக்குரிய படியைக் கடப்பதைப் படிகடத்தல் எனக் குறிப்பிடுவர்.

கோயில் பணிகளைச் செய்யக்கூடிய சகல தகைமைகளும் வாய்ந்தவரைத் தலைமைக் கட்டாடியார், நல்லநாளில் சுபவேளையில் படி கடக்க வைப்பார். படிகடக்க இருப்பவர் விரதமிருந்து, நீராடிப் புத்தாடை புனைந்து, தலைமைக் கட்டாடியாரிடம் சத்தியப்பிரமாணமான வாக்குறுதி கொடுப்பார். அத்தோடு கண்ணகி அம்மனை வழிபட்டு மூலத்தானப் படியில் மடை வைத்துத் தேங்காய் உடைத்து, மூலத்தானத்துக்குள் காலடி வைப்பதே படி கடத்தல் ஆகும். கட்டாடியாருடைய வாரிசுகளுக்கு மட்டுமே செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலிலே சடங்கு செய்யும் உரிமையுள்ளது. ஆகம முறைப்படி குருக்கள்மார் ஆசாரி அபிடேகம் செய்வதற்குச் சமமானதாக இச்சடங்கினைக் கொள்ள முடியும்.

*வளரும்...*



# அன்பின் தொனி - 566

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர்.**

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது. மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந் திருக்கிறது, நீதியும் நியா-யமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம். அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது. அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது, பூமி அதைக் கண்டு அதிர்ந்தது. கர்த்தரின் பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று. வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது, சகல ஜனங்களும் அவருடைய மக-மையைக் காண்கிறார்கள். சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாரா ட்டுகிறயாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக, தேவர்களே, நீங்களெல்லாரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள். சீயோன் கேட்டு மகிழ்ந்தது, கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந் தார்கள். கர்த்தாவே, பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர், எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர். கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள், அவர் தம்முடைய பரிசுத்தவான்களின் ஆத்துமாக் களைக் காப்பாற்றி, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவிக்கிறார். நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது. நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத் தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். - **சங்கீதம்** 97: 1-12

**கர்த்தர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்.**

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார், அவருடைய வலதுகரமும், அவரு டைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது. கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார். அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபை யையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார், பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது. பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள், முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில் பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரி யுங்கள். சமுத்திரமும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக. கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது. அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார், பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார். - **சங்கீதம்** 98: 1-9

**மகத்துவமும் பயங்கரமுமான தேவாதி தேவன்.**

கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக, அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக. கர்த்தர் சீயோனில் பெரியவர், அவர் எல்லா ஜனங்கள்மேலும் உயர்ந்தவர். மகத்துவமும் பயங்கரமுமான உமது நாமத்தை அவர்கள் துதிப்பார்களாக, அது பரிசுத்தமுள்ளது. ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது, தேவரீர் நியாயத்தை நிலைநிறுத்துகிறீர், நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர். நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதபடியிலே பணியுங்கள், அவர் பரிசுத்தமுள்ளவர். அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். மேகஸ்தம்பத்திலிருந்து அவர்களோடே பேசினார், அவர்கள் அவருடைய சாட்சிப்பிரமாணங்களையும் அவர் தங்களுக்குக் கொடுத்த கட்டளையையும் கைக்கொண்டார்கள். எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் அவர்களுக்கு உத்தரவு அருளினீர், நீர் அவர்கள் கிரியைகளினிமித்தம் நீதி சரிக்கட்டினபோதிலும், அவர்களுக்கு மன்னிக்கிற தேவனாயிருந்தீர். நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவருடைய பரிசுத்த பர்வதத்திற்கு நேராகப் பணியுங்கள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர். - **சங்கீதம்** 99: 1-9

**கர்த்தரே தேவனென்று அறியுங்கள்.**


பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். கர்த்தரே தேவனென்று அறியுங்கள், நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார், நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதி யோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரி யுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.
- **சங்கீதம்** 100: 1-5

**என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன்.**

இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன், கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உத்தமமான வழி யிலே விவே-கமாய் நடப்பேன், எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள் ளுவேன். தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன், வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன், அது என்னைப் பற்றாது. மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகலவேண்டும், பொல்லாதவனை அறியமாட்டேன். பிற னை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன், மேட்டிமைக் கண்ணனையும் பெருநெஞ்சுள்ளவனையும் பொறுக்கமாட்டேன். தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என்கண்கள் அவர்கள்மேல் நோக் மாயிருக்கும், உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான். கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில் லை, பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராத படி வேர்அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன். - **சங்கீதம்** 101: 1-8

*தொடரும்...*


SIVA SAKTI ASTROLOGY PSYCHIC CENTER



INDIAN ASTROLOGER & PSYCHIC



Most Powerful Spiritual Healer

We can Handle any Problem

25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்

Remove Black Magic, Witchcraft, Obeya, Evil Spirits

Bad Luck & Jadoo & Give 100%, Life Long Protection

கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து

ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,

இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.

செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி, நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம், காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்

100% SATISFACTION GUARANTEED

Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result

Master: YOGAN R.K.
416-303-8949
6012 A, Yonge St, #201,
North York ON M2M 3V9

Pandit: KUMAR SWAMY
416-726-4474
2649 Eglinton Ave East,
Scarborough ON, M1K 2S2

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு:

22 - 05 - 1936

மறைவு:

30 - 05 - 2020

# அமரர் திரு. வைத்திலிங்கம் பொன்னுத்துரை

(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை - முன்னாள் ஊழியர் - வலிகாமம் மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சங்கானை)

எமது அன்பிற்கும் பெரு மதிப்பிற்கும் உரிய வைத்திலிங்கம் பொன்னுத்துரை அவர்களின் இழப்பு பற்றிய செய்தியை பல்வேறு வழிகளில் அறிந்து, எம்மோடும் எமது குடும்பத்தினரோடும் தொடர்பு கொண்டு, தமது அனுதாபங்களைத் தெரிவித்த நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து எம்மோடு தொடர்புகொண்டு அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட அன்பர்களுக்கும் நன்றி

மேலும் கனடாவில் நடைபெற்ற அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு நேரடியாக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம். நன்றியுடையவர்களாக உள்ளோம்.

மறைந்த வைத்திலிங்கம் பொன்னுத்துரை அவர்கள், தனது வாழ்நாளில். எமது குடும்பத்திற்கு மாத்திரமல்ல, அயலவர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவரோடும் மிகுந்த அன்பு செலுத்தி நட்புடன் பழகி, உதவிகள் செய்து விசுவாசத்துடன் பழகி அனைவராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராகத் திகழ்ந்தார்.

ஆனால் அவரது திறந்த மனதுடைய வாழ்க்கையில் பல சங்கடங்களையும், துயரங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததை அவரது இறுதி நாட்களை வரை எண்ணி எண்ணி மனம் வருந்தியவர். பல வருடங்களுக்கு முன்னர் சொந்த ஊரில் ஏற்பட்ட சில அனர்த்தங்களின் போது, சொந்த இன மக்களாலேயே தாக்குதலுக்கு உள்ளாகி உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர் வைத்திலிங்கம் பொன்னுத்துரை அவர்கள். எப்போதும் மற்றவர்கதளின் கஸ்டங்களின் போது அவர்களுக்கு உதவிகள் செய்வதற்கா ஓடோடிச் சென்று அருகில் நிற்கும் பண்பு கொண்ட இவர், தனக்கு நெருக்கமானவர்களுக்கு உதவிகள் செய்தமைக்காக தனது சொந்த மக்களால் வெறுக்கபபட்டவர். இந்த சம்பவங்கள் அவரை இறுதி வரை மிகவும் பாதித்து இருந்தன என்பதை நாம் நன்கு அறிந்திருந்தோம்.

மேலும், தனது குடும்பத்தில் பல ஆண்டுகளுக்கு முன் 1980 ம் ஆண்டு இடம்பெற்ற ஒரு சங்கடமான சம்பவத்தால் தனது வாழ் நாள் முழுவதும் மிகுந்த அவமானத்துடன் தனது எஞ்சிய நாட்களைக் கவலைகளுடன் கழித்தவர் வைத்திலிங்கம் பொன்னுத்துரை அவர்கள் ஆவார். தான் பெற்ற மகள் தொடர்பான அந்த சம்பவம் அவரது வாழ்க்கையில் மனநிலை பாதித்த ஒன்றாக அமைந்தது.

அவர் கனடாவின் நல்லதோர் வாழ்க்கையை தொடர்வதற்கா தனது புதல்வர்களால் அழைக்கப்பட்டாலும், இங்கு வாழ்ந்த ஐந்தாறு ஆட்களால் எமது குடும்பத்தில் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது, தனது மூத்த புதல்வர் எனது பிள்ளைகள் அவர்களது அப்பப்பாவை பார்ப்பதற்காகச் சென்றபோது அவரால் வெளியேற்றப்பட்டது கூட அவருக்கு பெரிதும் கவலை அளிக்கும் வகையில் அமைந்தன. இதனால் தனது குடும்பத்தில் பிள்ளைகளிடையே பிரிவுகள் ஏற்பட்டமை கூட இவரை இறுதி வரை கவலைக்குள்ளாக்கிய விடயமாகவே இருந்தது.

ஆனால் ஒரு ஒப்பற்ற தந்தைக்கு நாம் பிள்ளைகளாகப் பிறந்தோம் என்ற நிறைவோடு அன்னாருக்கு இந்த நாளில் அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரை வணங்குகின்றோம்

இங்ஙனம்: மகன் - குகன் (கனடா)

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc….
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1264 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 26, 2020

# எம்ஜிஆர்–102 இசை நிகழ்வில் சேகரிக்கப்பெற்ற 128,019.01 டாலர்கள் நன்கொடைகள் மூலமாக 13 உயிர் காக்கும் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்ட 'நிவாரணம்' செந்தில் குமரன்

சென்ற ஆண்டின் குறிப்பாக MGR 102 இசை நிகழ்வின் ஊடக சேகரிக்கப்பெற்ற 128,019.01 கனடிய டாலர்கள் நன்கொடைகள் மூலமாக 13 உயிர் காக்கும் சத்திர சிகிச்சைகளையும், 20 ஏழை குடும்பங்களுக்கான வாழ்வாதாரங்களையும், 10 இதர மருத்துவ சிகிச்சைகளையும், கடந்த 12 மாதங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான "நடமாடும் மருத்துவ சேவையினை" தொடர்ச்சியாக வழங்கியும், 12 மாதங்கள் வடமராட்சி மருதங்கேணியில் உள்ள கனடா கம்ப்யூட்டர் சென்டரில் மாணவர்களுக்கான இலவச கணினி வகுப்புகளை வழங்கியும் உள்ளோம்.

இவ்வாறு கனடாவில் இயங்கும் 'நிவாரணம்'' அமைப்பின் ஸ்தாபகர் செந்தில் குமரன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ள்ளார்.

அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இவையெல்லாம் நடைபெறுவதற்கு காரணமான அத்தனை உள்ளங்களுக்கும், அள்ளியும் கிள்ளியும் கொடுத்த நன்கொடையாளர்களுக்கும் (குறிப்பாக திரு திருமதி பிரான்சிஸ் அந்தோனிப்பிள்ளை குடும்பத்திற்கும்), திரு கார்த்திக் ராமலிங்கம் -ஷீயானஸ் இசை கலைஞர்களுக்கும், பாடகர்களுக்கும், அணைத்து மீடியா நண்பர்களுக்கும், இசை நிகழ்வில் உதவிய தொழில் நுட்ப கலைஞர்களுக்கும், புகைப்பட மற்றும் காணொளி கலைஞர்கள், RJ Multi Litho> Mevo Inc, தாயகத்தில் உள்ள நிவாரண அமைப்பின் தொண்டர்களுக்கும், கனடா கந்தசாமி கோவில்




நிர்வாகத்திற்கும், இந்த கணக்குகளை எனக்கு தயாரிப்பதற்கு பெரு உதவியாக இருந்த சாம்பவி 'சண்முகநாதனுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்! ஊர் கூடி தேர் இழுத்து பல உயிர்களை காப்பாற்றி உள்ளோம்! பல வாழ்வாதாரங்கள் வழங்கி உள்ளோம்! நன்றி! நன்றி!" என்று குறிப்பிட்டுள்ளார்.

# "கிழக்கு மாகாணத்தை விரைந்து கைப்பற்ற உதவியதன் மூலம் இராணுவத்திற்கும ஒத்துழைப்பு வழங்கிய கருணா தான் சார்ந்த தமிழர் போராட்டத்திற்கு துரோகம் இழைத்தார்"

## தென்னிலங்கையில் தெறிக்கும் விமர்சனங்களிலிருந்து கருணாவைக் காப்பாற்ற முனையும் தென்னிலங்கை அரசியல்வாதிகள்

கிழக்கு மாகாணத்தை விரைந்து கைப்பற்ற கருணாவே காரணம்

ஆனால் அவரது கருத்தானது மிலேச்சத்தனமானது. என்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க இலங்கை அரசிற்கும் இராணுவத்திற்கும் அவர் ஒத்துழைப்பு தான் வழங்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கருணா தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

"புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண தலைவராக செயற்பட்டவரே கருணா. அப்போது அவர் எமது இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளை கொன்றிருக்கலாம். எனினும் தீர்க்கமான கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்த புலிகளின் தலைமையகத்தை தீயிட்டுக்கொளுத்திவிட்டு, எமது இராணுவத்துடன் இணைந்துகொண்டார்.

இதனால் கிழக்கு மாகாணத்தை விரைந்து கைப்பற்றக்கூடியதாக இருந்தது. தொப்பிகல போன்ற தாக்குதல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அதன்பின்னரே அரசாங்கத்துடன் இணைந்தார் என்றும் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். இந்த கருத்துக்கள் மூலம் கருணாவை அவர் சிங்கள மக்களுக்கு அவர் துரோகம் இழைக்கவில்லை, மாறாக கருணா தமிழர்களுக்கும், அவர்களின் போராட்டத்திற்கும் தான் துரோகம் இழைத்தார்" என்ற கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பியமை அவரது கருத்துக்களிலிருந்து தெளிவாகின்றது என்பது புலனாகின்றது



கொத்மலை நவதிஸ்பனை பகுதியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது அவர்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கருணா அம்மானின் கருத்தானது மிலேச்சத்தனமானது. அப்படியொரு கருத்தை அவர் வெளியிட்டிருக்கக்கூடாது. அந்த கருத்தை அனுமதிக்கமாட்டோம். இதற்காக கருணா கவலையடையவேண்டும். வேதனை அனுபவிக்கவேண்டும். அவரின் கூற்றை கண்டிக்கின்றேன். கடும் அதிருப்தியையும் வெளியிடுகின்றேன்" என்றார்.




# 'நண்பன்' என்னும் புதியதோர் இணையத்தளம் கடந்த திங்களன்று சென்னை மாநகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

'நண்பன்' - WORLD WIDE என்னும் புதியதோர் இணையத்தளம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று சென்னை மாநகரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் மூலம், மேற்படி நண்பன் இணையதளம் திங்கள் முதல் உலகலாவிய அனைத்து நண்பர்களின் பார்வைக்காக வெளிவரத் தொடங்கியது. விழாவில் நண்பன் இணையதளத்தின் இந்திய பொறுப்பாளர் திரு. அருண் கதாதரன் தலைமை தாங்கிச் சிறப்பிக்க சிறப்பு விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர் உலகின் பல நாடுகளிலிருந்தும் இணையவழி ஊடாக பல அன்பர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இங்கு காணப்படும் படத்தில் 'நண்பன்' இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதைக் காணலாம்.

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074